
# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

| மலர்:5 | இதழ்: 9 | ஜுன் : 2021 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
|---|---|---|---|---|
| **Volume:5** | **Issue: 9** | **June : 2021** | **Rs.10/-** | **Annual Subs: Rs.100/-** |



# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

கொரோனா இரண்டாவது அலையில் மனித இனம் அல்லல் பட்டுக்கொண்டுள்ளது. நமது சனாதன தர்மத்தில் இது போன்ற உற்பாதங்களின் போது இறைவனைத் துதித்து நிவர்த்தி பெற பல உபாயங்களை நம் முன்னோர்களான ரிஷிகளும் முனிவர்களும் சித்தர்களும் வழங்கியுள்ளனர். அவற்றில் குறிப்பிட்ட உபாயங்களை தற்கால ஸ்ரீ குருமார்கள் தேர்வு செய்து மக்களுக்கு தெரியப்படுத்தி வழி நடத்துகின்றனர்.

அந்த வகையில் ச்ருங்கேரி சாரதா பீடாதிபதிகள் "நம:சங்கராய" என்ற மந்திரத்தை ஒவ்வொரு நாளும் 1000 தடவை ஜபம் செய்ய அறிவுருத்தியுள்ளனர்.

சென்னை ஸ்ரீ மஹா மேரு மண்டலியின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் லோகக்ஷேமத்திற்காக கீழ்க்கண்ட பாராயணங்களை தினந்தோரும் பாராயணம் செய்து இந்த குழுமத்தில் பதிவிடுமாறு அறிவுருத்தியுள்ளார்கள்.

1. ஓம் நம : சங்கராய (ஒரு மணி நேர ஜபம்)
2. ராகவ யாதவீயம் (ஒரு முறை)
3. ச்யாமளா தண்டகம் (ஒரு முறை)
4. ஸ்ரீ சாகம்பரி ஸஹஸ்ரநாமம் (ஒரு முறை)
5. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (ஒரு முறை)

ஸ்ரீராகவ யாதவீயமும் ஸ்ரீ ச்யாமளா தண்டகமும் மண்டலியால் வழங்கப்பட உள்ளது.

அதுவரை ஏனைய ஜபத்தையும் பாராயணங்களையும் இன்று முதல் தொடர்ந்து செய்யுமாறு ஸ்ரீ மஹா மேரு மண்டலி அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

லோகக்ஷேமத்திற்கான நம் பங்கை ஆற்றுவோம் வாருங்கள்.

ஸ்ரீ மஹா மேரு மண்டலி.

மேலும் விபரங்களுக்கு :

**ஸ்ரீமதி இந்திரா பாலாஜி, 94440 60346**

# வேதபாரதி
## செய்திகள்

**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 21

**ப்$^{3}$ரஹ்ம வா இத$^{3}$மக்3ர ஆஸீத்$^{1}$, த$^{1}$தா$^{3}$த்$^{1}$மாநமேவாவேத்$^{1}$"அஹம் ப்$^{3}$ரஹ்மாஸ்மி" இதி$^{1}$ | த$^{1}$ஸ்மாத்$^{1}$. த$^{1}$த்$^{1}$ஸர்வம் அப$^{4}$வத் ||**

**-ப்$^{3}$ரஹதா$^{3}$ரண்யக$^{1}$உபநிஷத்**

**பொருள் :** *முதலில் இது எல்லாம் ப்ரம்மமே ஆகியிருந்தது. அது தன்னை "அஹம் ப்ரஹ்மாஸ்மி", நான் ப்ரம்மமாய் இருக்கிறேன் என்று அறிந்து கொண்டது. அதிலிருந்து அது எல்லாமும் ஆகிவிட்டது.*

*அஹம் ப்ரஹ்மாஸ்மி இது ஒரு மஹா வாக்கியம்.*

*சுக்ல யஜுர் வேதத்தின் ப்ரஹதாரண்யக உபநிஷத்தின் ஸாரமாகிய இந்த மஹா வாக்கிய மந்திரம் ஜீவ ப்ரஹ்ம ஐக்யத்தை உபதேசிக்கிறது.*

*அஹம் ப்ரஹ்மாஸ்மி – இதில் அஹம் என்றால் நான் ப்ரஹ்மாஸ்மி என்றால் ப்ரம்மமாய் இருக்கிறேன் என்று பொருள். நான் ஜீவன் அல்லன்; ஜீவபாவம் அவித்யையினால் கற்பிக்கப்பட்டது. இதை அறிவதே முக்தி.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 5 இதழ்: 9

*அச்சிட்டு வெளியிடுபவர்*
*பதிப்பாளர், ஆசிரியர்*
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 *அன்னை இந்திரா நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*
*செல்: 94434 95950*

*அச்சகம்*
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
*39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.*

**REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**

**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**Published on : 1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/21-23 / Valid from 01.01.2021 to 31.12.2023**

*வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை வழங்கிட*

**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

*நிர்வாக முகவரி:*
*எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| *அட்டைப்பட விளக்கம்* | *5* |
| *வைகாசி மாத விசேஷங்கள்* | *7* |
| *ஸ்ரீமத் பகவத்கீதை* | *8* |
| *கற்பூர பொம்மை* | *11* |
| *நாலடியார்* | *13* |
| *ஸ்ரீ ஆதிசங்கரரின் வேதாந்த பக்திக் கருவூலங்கள்* | *14* |
| *ஸ்ரீமத் பாகவதம்* | *18* |
| *மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்* | *21* |
| *தர்மத்தின் குரல்* | *27* |
| *சிருங்கேரி மஹா சுவாமிகள்* | *28* |
| *பெற்றோர்களே கவனியுங்கள்* | *29* |
| *பாரத தேசப் புனித யாத்ரை* | *32* |
| *சாதனைப் பறவைகள்* | *35* |
| *பசு சர்வரோக நிவாரணி* | *38* |
| *பதினெண் புராணங்கள்* | *40* |
| *புரோஹிதர்* | *44* |



**சந்தா விவரம்**

*வருட சந்தா ரூ.100*
*ஆயுள் சந்தா ரூ.1500*

*சந்தா அனுப்புகிறவர்கள்*
**Vedabharathi**
*என்ற பெயருக்கு காசோலையை எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*
*சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.*

*புத்தக வடிவமைப்பு :*
**ரெம்ஸ் பிரிண்ட்ஸ்**
*நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர், காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.*
*போன்: 8939000064*

# அட்டைப்பட விளக்கம்



## “ஸ்திதப்ரக்ஞன்” மறைந்தார்

**(17.01.1956 - 10.05.2021)**

**ப்ரஜஹாதி யதா காமாந் ஸர்வாந் பார்த² மநோக³தாந்/**
**ஆத்மந்யேவாத்மநா துஷ்ட ஸ்தி²தப்ரஜ்ஞஸ்ததோச்யதே//**
**(கீதை 2-55)**

*அர்ஜுனா எப்பொழுது இந்த மனிதன் மனத்திலுள்ள எல்லா ஆசைகளையும் அறவே துறக்கிறானோ, மேலும் ஆத்மாவினால் ஆத்மாவிடமே ஆனந்தமாக இருக்கிறானோ, அப்பொழுது அவன் ஸ்திதப்ரக்ஞன் என்று கூறப்படுகிறான்.*

*தேனி – வேதபுரீ - ஆதிகுரு ஸ்ரீ – ப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யா பீடாதிபதி ஸ்ரீ புவனேஸ்வரி அவதூத பீடாதிபதி* **பூஜ்யஸ்ரீ ஓங்காரநந்தா மஹாஸ்வாமிகள்**, *10.05.2021 திங்கட்கிழமை மாலை சுமார் 5.40 மணியளவில் மஹாஸமாதி அடைந்தார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவருடைய இறுதி சம்ஸ்காரங்கள், ஸ்வாமிஜி அவர்கள் முன்னரே தேர்வு செய்திருந்த இடத்தில், அவர் வகுத்து வைத்திருந்த முறைப்படி நடைபெற்றது. அவருடைய மறைவு நம்மை எல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.*

*வேதபாரதியின் ஆன்மீக குருவாகவும், வழிகாட்டியாகவும் இருந்தவர். ஸ்வாமிஜிக்கும் வேதபாரதி அமைப்பிற்கும் எப்போதும் நெருங்கிய தொடர்பு உண்டு. 2009-ல் “வேதபாரதி” திருப்பூரில் நடத்திய முதல் சந்த்யாவந்தன பயிற்சி முகாமை துவக்கி வைத்தார்கள். பூஜ்ய ஸ்ரீ பரமானந்த*

*பாரதி ஸ்வாமிகள் அருளிய "தர்மத்தின் குரல்" என்னும் புத்தகத்திற்கு பூஜ்யஸ்ரீ ஓங்காரநந்தா மஹாஸ்வாமிகள் 14 பக்கங்களில் நீண்ட "அருள்வாழ்த்துரை" வழங்கி திருப்பூரில் தம்முடைய திருக்கரங்களால் புத்தகத்தினையும் வெளியிட்டார்கள்.*

*ஸ்வாமிஜி அவர்கள் வேதபாரதியின் செயல்பாடுகள் அனைத்திற்கும் எப்போதும் சிறப்புரை வழங்குவார்கள்.*

*வேதபாரதி அமைப்பு 2017 ஆம் ஆண்டு "ஸ்ரீ கோடி காயத்ரீ ஜப யக்ஞத்தை நடத்தியது. அதன் துவக்கவிழாவை சென்னை தேனாம்பேட்டையில் உள்ள* **"தத்வலோகா"** *அரங்கத்தில் ஸ்வாமிஜியின் தலைமையில் நடத்த தீர்மானித்தோம். அதற்காக ஸ்வாமிஜியை அணுகிய போது அவர் அதை இன்முகத்தோடு ஏற்று தம்முடைய இடையறாத பணிகளுக்கும், பொறுப்புகளுக்கும் இடையே வருகை தந்து விழாவினை துவக்கிவைத்து காயத்ரீ மந்திரத்தின் மஹிமைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள்.*

*ஸ்வாமிஜி நான்கு வேதங்களையும் கற்று உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஸ்ரீமத் பகவத் கீதையையும், திருக்குறளையும், உபநிஷத்துக்களையும் குறித்து பிரசாரம் செய்துள்ளார். இந்து மதத்திற்காக துணிந்து குரல் கொடுத்தவர்.*

*ஸ்வாமிஜியின் லக்ஷியம் =* **"அனைவருக்கும் என்றும் அமைதியான ஆனந்தம்"** *அவருடைய பொன்மொழிகள்.*

**கவலையை விடு**

**கடமையைச் செய்**

**கடவுளை உணர்வாய்**

*உடல் அழிக்கப்படும் போதும்* **"ஆன்மா"** *அழிவதில்லை. அவருடைய* **"ஆன்மா"** *நம்மை வழிநடத்தும் அருட்குருநாதரை போற்றி வணங்குவோம்.* **ஆசிரியர்,** *வேதபாரதி செய்திகள்.*

## 09.07.2021 வெள்ளிக்கிழமை - அமாவாஸை

*ஸ்ரீ ப்லவ நாம ஸம்வத்ஸரே உத்தராயணே க்ரீஷ்மருதௌ மிதுன மாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ ப்ருகுவாஸரயுக்தாயாம் ஆர்த்ரா நக்ஷத்ர யுக்தாயாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ அமாவாஸ்யா புண்யகாலே தர்ஸ ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.*

## ஸ்ரத்தாஞ்சலி 13.05.2021

*13.05.2021 அன்று மாலை 6.15 மணி முதல் 7.30 மணி வரை பூஜ்ய ஸ்ரீ ஓம்காரனந்தா மஹாஸ்வாமிகள் நினைவை போற்றும் ஸ்ரத்தாஞ்சலி ஆன்லைன் வாயிலாக நடைபெற்றது. ஸ்வாமிகளின் தவ வாழ்க்கை ஹிந்து சமுதாய மேன்மைக்காக வாழ்நாள் முழுதும் எடுத்த முயற்சிகள், பல நூல்கள் கற்று முழுவதுமாக உணர்ந்து நமக்கெல்லாம் புரியும் வகையில் எடுத்துச் சொன்ன பாங்கு ஸ்வாமிஜியின் அறச்சீற்றம் குறித்து வேதபாரதியின் நிறுவன அறங்காவலர் ஆடிட்டர் ஸ்ரீ T.R. ராமனாதன், ஸ்வாமிஜியின் சிஷ்யர் ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி, திருப்பூர் விஷ்ணு மண்டல தலைவர் டாக்டர் ஸ்ரீ K. நடராஜன் சொல்லின் செல்வர் ஸ்ரீ R.B.V.S. மணியன் ஜி அவர்கள் கலந்து கொண்டு நினைவலைப் போற்றினார்கள். திருச்சி ஸ்ரீ ஸ்ரீ வேளுக்குடி க்ருஷ்ணன் ஸ்வாமிகள் தனது அஞ்சலியை பதிவு செய்து அனுப்பி ஒளிபரப்பப்பட்டது மிகவும் நெகிழ்வான இந்நிகழ்ச்சியில் 230க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தன் க்ருதக்ஞத்தை தெரிவித்தார்கள்.*

## ப்லவ வருஷம் - ஆனி மாத விசேஷங்கள்

### (ஜுன் 15.06.2021 முதல் ஜுலை 16.07.2021 வரை)

| | | | |
|---|---|---|---|
| *16.06.2021* | *ஆனி 2* | *புதன்* | *சஷ்டி விரதம்* |
| *21.06.2021* | *ஆனி 7* | *திங்கள்* | *ஏகாதசி* |
| *22.06.2021* | *ஆனி 8* | *செவ்வாய்* | *துவாதசி, பிரதோஷம்* |
| *23.06.2021* | *ஆனி 9* | *புதன்* | *ஸ்ரீ அனந்தராம தீட்சதர் ஜயந்தி* |
| *24.06.2021* | *ஆனி 10* | *வியாழன்* | *பௌர்ணமி* |
| *27.06.2021* | *ஆனி 13* | *ஞாயிறு* | *ஸ்ரீ சுகப்பிரம்ம மஹரிஷி ஜயந்தி* |
| *30.06.2021* | *ஆனி 16* | *புதன்* | *சஷ்டி* |
| *05.07.2021* | *ஆனி 21* | *திங்கள்* | *ஏகாதசி* |
| *06.07.2021* | *ஆனி 22* | *செவ்வாய்* | *ஸ்ரீ கூர்ம ஜயந்தி* |
| *07.07.2021* | *ஆனி 23* | *புதன்* | *பிரதோஷம்* |
| *09.07.2021* | *ஆனி 25* | *வெள்ளி* | *அமாவாசை* |
| *13.07.2021* | *ஆனி 29* | *செவ்வாய்* | *ஸ்ரீ அழகியசிங்கர் ஜயந்தி<br>ஸ்ரீ மாணிக்க வாசகர் ஜயந்தி* |
| *15.07.2021* | *ஆனி 31* | *வியாழன்* | *ஆனித்திருமஞ்சனம்* |
| *16.07.2021* | *ஆனி 32* | *வெள்ளி* | *தட்சணாயன புண்யகாலம்* |

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,

ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 26



## அத்தியாயம் – 2

## ஸாங்கிய யோகம்

*சென்ற மாதம் ஸாங்கிய யோகத்தில் ஸ்லோகம் 16க்கான விளக்கம் பார்த்தோம். இந்த மாதம் ஸ்லோகங்கள் 17, 18 மற்றும் 19 இந்த மூன்று ஸ்லோகங்களிலும் பகவான் அர்ஜுனனுக்கு* **"ஆத்மா"** *குறித்து விளக்குகிறார்.*

**ஸ்லோகம் 17** = *பொருள் : எல்லா இடத்திலும் பரவியுள்ள ஆத்மாவிற்கு என்றைக்கும் எப்போதும் அழிவில்லை என்பதை புரிந்துகொள். இவ்வாறு அழிவே இல்லாத ஆத்மாவை யாராலும் அழித்துவிட முடியாது என்பதையும் தெரிந்துகொள்.*

**"தது அவிநாசி வித்தி"** = *அது வினாசமடையாதது என்று அறிவாயாக. அதாவது நம்முடைய உடலில் உள்ள செல்லுகள் அழிந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் நம் விவேகம்* Intelligence Mind *ஒரு போதும் அழிவதில்லை.*

*ஆகாயம் எங்கும் வியாபித்து இருக்கிறது. சில சமயங்களில் அதை கருத்த மேகங்கள் மறைக்கும். ஆனால் அந்த மேகங்கள் விலகி செல்லும் போது ஆகாயம் எந்தவித மாற்றமும் இல்லாமல் நிர்மலமாக காணப்படும். ஆகாசம்* **"சத்"**, *மேகங்கள்* **"அசத்"** *அல்லது* **"மித்யை".** *"சத்" ற்கு அழிவு கிடையாது. அதை யாராலும் அழிக்கமுடியாது. அதே போல "சிதாகாசம்" அல்லது "ஆத்மா" அல்லது "பிரம்மம்" "சத்" அழிக்க முடியாதது.*

**ஸ்லோகம் 18 = பொருள் :** *"ஜட உடல் மட்டுமே அழியக்கூடியது. ஆனால் "ஆத்மா" நித்யமானது. அழிவற்றது. ஆதலால் பார்த்தா ஆத்மாவைக் குறித்தோ, தேகத்தைக் குறித்தோ துக்கிப்பதை விடுத்து யுத்தம் செய்" என்கிறார் பகவான்.*

இந்த ஸ்லோகத்தில் இன்னும் விளக்கமாக கூறுகிறார் பகவான் கிருஷ்ணர். ஜட உடல் இயற்கையிலேயே அழியக்கூடியது. அது உடனே அழியலாம் அல்லது நூறு வருடங்கள் கழித்து அழியலாம். அதை எப்போதும் பாதுகாப்பது முடியாது. ஆனால் **"ஆத்மா"** எதிரியால் பார்க்கவும் இயலாதபடி மிக நுண்ணியதாக இருக்கிறது. "ஆத்மா" ரோமத்தின் கணுவில் பத்தாயிரத்தில் ஒரு பங்கு அளவுடையதாக இருக்கிறது என்று **"ஸ்வேதாஸ்வதர"** உபநிஷத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

**ஸ்லோகம் 19 : பொருள் :** எவன் ஆத்மாவை கொலை செய்பவனெற்று எண்ணுகிறானோ அல்லது எவன் கொல்லப்படுபவன் என்று எண்ணுகிறானோ அவ்விருவரும் உண்மையை அறிந்தவர் இல்லை. உண்மையில் ஆத்மா கொல்லுவதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை.

**ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்**

**நாயம் பூத்வா ப⁴விதா வா ந பூ⁴ய:/**

**அஜோ நித்ய : ஸாஸ்வதோயம் புராணோ**

**ந ஹந்யே ஹந்யமானே ஸரீரே // (கீ 2-20)**

**பொருள் :** ஆத்மாவிற்கு பிறப்போ, இறப்போ கிடையாது. ஒரு முறை இருந்து பின் இல்லாமல் போவதுமில்லை. ஆத்மா பிறப்பற்ற, நித்தியமான என்றும் நிலைத்திருக்கும், மரணமற்ற, மிகப்பழமையானவன். உடல் அழிக்கப்படுவதால் அவன் அழிக்கப்படுவதில்லை.

இந்த ஸ்லோகமும் மிக முக்கியமான ஸ்லோகம். மனனம் செய்ய வேண்டிய ஸ்லோகம்.

இவ்வுடல் ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டே இருக்கிறது. தாயின் கருப்பையில் அது பிறவி எடுக்கிறது. அதன் பின் பிள்ளை பிராயம், வாலிபம், முதுமை கடைசியில் மரணம். ஆத்மா பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை. உலகத்தில் பிறப்பது அல்லது உற்பத்தியாவது எல்லாமே கடைசியில் அழியக்கூடியவையே. உடலைப்போல **"ஆத்மா"** எப்போதும் முதுமை அடைவதில்லை. உடலின் மாற்றங்கள் ஆத்மாவை பாதிப்பதில்லை.

"கடோபநிஷத்திலும் (கட உபநிஷதம்) இது போன்ற ஸ்லோகத்தைப் பார்க்கலாம்.

**ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்**
**நாயம் குதச்சித் ந பபூவ கச்சித்/**
**அஜோ நித்ய : ஸாஸ்வதோயம் புராணோ**
**ந ஹந்யே ஹந்யமானே ஸரீரே//** **(கட. உ 1-2-18)**

*இதன் பொருளும் நோக்கமும் கீதையில் உள்ளதைப் போன்றதே. "அறிவு நிரம்பிய (அ) "நிகரற்றது" என்னும் பொருள் படக்கூடிய* **"விபஸ்சித்"** *ஒரு சொல்மட்டுமே விசேஷமாக சேர்க்கப்பட்டுள்ளது.*

**பொருள் :** *ஆத்மா பிறப்பதில்லை, இறப்பதும் இல்லை. இது எதிலிருந்து உண்டாவதில்லை, எதுவும் இதிலிருந்து உண்டாவதுமில்லை. இது பிறப்பற்றது. என்றென்றும் இருப்பது. நிலையானது, பழமையானது. உடம்பு அழிக்கப்பட்டாலும் அழியாதது.*

*தொடரும்....*

# ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி நிகழ்ச்சிகள்

*இறை அருள் குருவருள் ஒன்று சேர இந்த 'ஸ்ரீ ப்லவ" வருடப்பிறப்பன்று மிக விமரிசையாக "பஞ்சாங்க படனம்" என்று சொல்லப்படும் பஞ்சாங்கம் வாசித்தல் வைபவம் ஊரப்பாக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீகிருஷ்ணா சங்கர் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.*

*திருமதி.கிருஷ்ணா சங்கர் இறைவணக்கம் பாட ஊரப்பாக்கம் ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கம் வாசித்து ஸ்ரீ ப்லவ வருட பலன்களை அழகாக விளக்கினார்கள்.*

*ஊரப்பாக்கம் செயல்வீரர் திரு.சந்திரசேகர் அவர்கள் மிகசிரத்தையோடு ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த நிகழ்வில் ஸ்ரீ இரா. நாராயணசுவாமி அவர்கள் அறிமுக உரையும் நிறைவு விளக்க உரையும் நிகழ்த்தினார்கள்.*

*விழாவின் ஒரு பகுதியாக ஊரப்பாக்கம் ஸ்ரீ நரசிம்மன் குழுவினரின் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் நடைபெற்றது. தீப ஆராதனை மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டு தமிழ் வருடப்பிறப்பு வைபவம் நிறைவு பெற்றது.*

# கற்பூர பொம்மை

மேற்கு தொடர்ச்சி மலைகளின் ஒரு பகுதியான வால்பாறை என்ற ஊரின் மலையடிவாரத்தில் தொண்ணூறுகளில் ஒரு சினிமா தியேட்டர் இருந்துள்ளது. அச்சமயம் அந்த தியேட்டரில் 'கேளடி கண்மணி" திரைப்படம் ஓடிக்கொண்டிருந்தது. 'கேளடி கண்மணி'' என்கிற திரைப்படத்தின் பெயரைக் கேட்டதுமே மண்ணில் இந்த காதலின்றி பாடலும், எஸ்.பி.பி.யும் நினைவுக்கு வரும். இனிமேல் அதோடு சேர்த்து வால்பாறையில் நடைபெற்ற இந்த சம்பவமும் நினைவுக்கு வரும்.

வால்பாறை, யானைகள் நிறைந்த பகுதி. நித்தமும் மாலை ஏழு மணியளவில் தனியாக ஒரு யானை "கேளடி கண்மணி" திரையிடப்பட்டிருந்த அரங்கின் அருகே நின்று சிறிது நேரம் எதையோ கவனித்துவிட்டு சென்றுள்ளது. யானையின் இந்த நடவடிக்கையை சில நபர்கள் கவனித்துள்ளார்கள். சில நாட்கள் கழித்து 'கேளடி கண்மணி" தியேட்டரை விட்டு நீக்கப்பட்டது. இருந்தும் அதே யானை இரண்டு, மூன்று நாட்களுக்கு தொடர்ந்து அதே ஏழு மணியளவில் எதையோ எதிர்பார்த்து காத்திருந்து விட்டு சென்றுள்ளது.

யானையின் இந்த அசாதாரண பழக்கத்தை கவனித்தவர்கள், யானைப் பாகனிடம் இதைப் பற்றி விசாரித்துள்ளனர். அதற்கு யானைப் பாகனிடமிருந்து வந்த பதில் எல்லோரையும் நெகிழ்ச்சியுறச் செய்தது. யானை பாகன் கூறினான் **"கற்பூர பொம்மை ஒன்று கைவீசும் தென்றல் ஒன்று"** பாடலை கேட்கத்தான் யானை இங்கே வருகிறது என்று. சில நாட்களுக்கு முன்னர் இந்த யானையின் குட்டி எதிர்பாராவிதமாக மின் கம்பத்தில் விபத்துக்குள்ளாகி இறந்து விட்டது. அச்சம்பவத்தையடுத்து இந்த தாய் யானை மதம் பிடித்து கட்டுக்கடங்காமல் காட்டிலும் ஊரிலும் திரிந்து, துயரத்திலிருந்து மீள முடியாமல் தவித்துள்ளது.

யாராலும் யானையின் போக்கை சரி செய்ய

இயலவில்லை. பிறகு அந்த சமயம் தற்செயலாக "கற்பூர பொம்மை" பாடலை கேட்டு இரண்டொரு நாட்களில் அதன் போக்கு சிறிது சிறிதாக மாறி தினமும் அந்த பாடலைத் தேடி வந்துள்ளது. இந்த பாடலே யானையின் மனதிற்கு அருமருந்தாக அமைந்திருக்கிறது. யானை பாகனின் பேச்சை கேட்டவர்களுக்கு கண்ணீரை தவிர வேறு எதுவும் சொல்ல முடியவில்லை

இந்த உண்மை சம்பவம் வால்பாறை பகுதியில் இருந்து வெளியான கட்டுரையில் பதிவாகியுள்ளது. கலைகளில், இசையில் உயர்வு - தாழ்வு என்பதே கிடையாது. எந்த வகை இசையாக இருந்தாலும் அது ஏற்படுத்தும் உணர்வு மிகவும் ப்ரத்யேகமானது. இசையில் இருந்து வெளிப்படும் அதிர்வுகள் மூலமாக உடலில் ஏற்படும் மாற்றங்களை பற்றி நிறைய ஆராய்ச்சிகளும் நடந்துகொண்டிருக்கிறது.

யானைக்கு அன்று கேட்ட ராஜாவின் இசை ரஞ்சனியோ, கல்யாணியோ என்பதெல்லாம் அறியாது. இருந்தும் தன்னிலை மறந்து சஞ்சாரம் செய்து தனது மனதை கட்டுக்குள் கொண்டுவர இளையராஜாவின் இசை பெருந்துணையாக உதவியுள்ளது. ராஜாவின் இசை கோர்வைகள் நம் சமூகத்திற்கு கிடைத்த மிகப்பெரும் வரம், பல கோடி மக்களை தன் இசை மூலம் கட்டிப் போட்டதிற்கான காரணம் ஒவ்வொருவருக்குள்ளும் அந்த எளிய இசை ஏற்படுத்திய தாக்கம் தான்.

ராஜாவின் இசையை வெறும் அலங்கார வார்த்தைகளால் வெளிப்படுத்த இயலும் என நான் நம்பவில்லை. இருந்தும் ஒரு வாயில்லா ஜீவனுக்கு அவரின் இசை தந்த அமைதியை போல, பல மனிதர்களின் மனங்களை அவர் இசை மூலம் குணப்படுத்தியதை மறுக்க முடியாது. கவிஞர் வாலி ராஜாவைக் கொண்டாடியது போல

**"ராகங்கள் தாளங்கள் நூறு ராஜா உன் பேர் சொல்லும் பாரு"**

புது ராகம் படைப்பதாலே ராஜாவும் இறைவனே. இளையராஜாவின் இசை தலைமுறைகளைத் தாண்டி நிச்சயம் வாழும்.

**- வெ. சிவசங்கரி**

# நாலடியார்

## 4. அதிகாரம் = 4 "அறன் வலியுறுத்தல்"

*நம்முடைய நீதி நூல்கள் அனைத்திலும் மனிதர்கள் தர்மம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்திய பாடல்கள் ஏராளமாக உள்ளன. நாலடியாரிலும் "அறன் வலியுறுத்தல்" என்ற அதிகாரத்தில் பத்து பாடல்கள் உள்ளன. அதிலிருந்து இரண்டு பாடல்கள் வாசகர்களுக்காக இங்கே*

**வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா**
**மனத்தின் அழியுமாம் பேதை - நினைத்ததனைத்**
**தொல்லையது என்றுணர் வாரே தடுமாற்றத்து**
**எல்லை இகந்தொருவு வார்**

**பொருள் :** *அறிவில்லாதவன், முன் செய்த தீவினை இப்போது வந்து பயனைத் தந்து துன்புறுத்தும் போது பெருமூச்சு விட்டு மனம் வருந்துவான். அத்தீவினைப் பயனை நினைத்துப் பார்த்து, இது முற்பிறப்பின் பாவத்தால் நேர்ந்தது என்று உணர்ந்து அதனை ஏற்று அமைதியாக அனுபவிக்கும் அறிவுடையோர் பிறவித்துன்பத்தின் எல்லையைக் கடந்து நீங்குவர்.*

**கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**
**துரும்பெழுந்து வேம்கால் துயராண்டுழ்வார்**
**வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்**
**வருங்கால பரிவ திலர்.** *(நா 35)*

**பொருள் :** *கரும்பை ஆலையில் ஆட்டி அதன் சாற்றினால் ஆகிய வெல்லக் கட்டியை நல்ல பதத்திலே கொண்டவர்கள், அந்த கரும்பின் சக்கை தீப்பற்றி எரியும்போது துன்புறமாட்டார்கள். அதுபோல, முயன்று நல்லறம் செய்து பிறவிப் பயனைப் பெற்றவர் எமன் வரும்போது துன்பமடையார்.*

*கரும்பில் நமக்கு வேண்டியது அதில் உள்ள சாறுதான். அந்த சாற்றை எடுத்தபின் விவசாயி அந்த கரும்பு சக்கையையே அந்த சாற்றை வெல்லாமாக்க அடுப்பில் இட்டு எரித்துவிடுவான். அந்த சக்கை எரியும் போது கவலைப் படமாட்டான். அதுபோல் இந்த உடம்பின் பயன் நல்லதைச் செய்வதுதான். அதைச் செய்தவர் உயிர் போவதற்கு வருத்தப்படமாட்டார்.*

*தொகுப்பு :* **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

# ஸ்ரீ ஆதி சங்கராின் வேதாந்த பக்திக் கருவூலங்கள்

*மே 2021* **“வேதபாரதி செய்திகள்”** *புத்தகத்தில், ஸ்ரீ ஆதி சங்கராின் ஜெயந்தியை முன்னிட்டு சங்கராின் வாழ்க்கை வரலாற்றைதொகுத்து வழங்கியிருந்தேன். அதில் ஸ்ரீ ஆதி சங்கரர் இயற்றிய ஸ்லோகங்களின் முழு விவரங்களையும் ஜுன் மாத இதழில் வழங்குவேன் என்று கூறியிருந்தேன். இதோ அதன் விவரங்கள்.*

*ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள் திக் விஜயம் செய்த இடங்களில் எல்லாம் அநேக ஸ்தோத்திரங்களையும், அஷ்டகங்களையும், புஜங்கங்களையும் இயற்றினார். அவை எல்லாம் இன்றும் பிரசித்தமானவைகளாக இருக்கின்றன. அழியாத கருவூலங்கள்.*

**1. பஞ்சரத்னங்கள் :**

**(1) மீனாட்சி பஞ்சரத்னம் :** *மதுரை மீனாட்க்ஷியின் அழகிற்கு அழகூட்ட பாடிய பாடல் “மீனாட்க்ஷி பஞ்சரத்னம்” (2) கணேச பஞ்சரத்னம், (3) ஸ்ரீ லலிதா பஞ்சரத்னம் (4) லக்ஷ்மீ நரசிம்ஹ பஞ்சரத்னம் (5) ஹனுமத் பஞ்சரத்னம் (6) அத்வைத பஞ்சரத்னம் (7) தேவி பஞ்சரத்னம் (8) அம்பா பஞ்சரத்னம்.*

**2. புஜங்கங்கள் :** *(1) கணேச புஜங்கம் (2) அலைவீசும் திருச்செந்தூர் முருகனைக் குறித்து பாடியது “சுப்ரமணிய புஜங்கம் (3) சிவ புஜங்கம் (4) பவானி புஜங்கம் (5) தேவி புஜங்கம் (6) துர்கா அபராத புஜங்கம் (7) காளி அபராத புஜங்கம் (8) ஸ்ரீ ராம புஜங்க ப்ரயாத ஸ்தோத்ரம் (9 ஸ்ரீ விஷ்ணு புஜங்க ப்ரயாத ஸ்தோத்ரம் (10) ஸ்ரீ சாரதா புஜங்க ப்ரயாதண்டகம்*

**3. ஸ்தோத்திரங்கள் :** *(1) வரத கணேச ஸ்தோத்ரம் (2) ப்ராதஸ்மரண ஸ்தோத்ரம் (3) வேதஸார சிவ ஸ்தோத்ரம் (4) சிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்ரம் (5) தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் (6) கனகதாரா ஸ்தோத்ரம் (7) நாசிக்கில் கோதாவரி தீரத்தில் “திரியம்பகேஸ்வரரையும், சோமநாதபுரத்தில் “பரமேஸ்வரனையும் வணங்கி இந்த இரண்டு ஸ்தலங்களும் சேர்த்து பன்னிரெண்டு சிவஸ்தலங்களிலும் பாதம் பதித்த சங்கரர் பாடியது “துவாதச லிங்க ஸ்தோத்ரம். (8) அர்த்தநாரீஸ்வர*

*ஸ்தோத்ரம் (9) லக்ஷ்மிநரஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம் (10) தசாவதார ஸ்தோத்ரம் (11) ஹரிஹரநாமாவளி ஸ்தோத்ரம் (12) காசி ஸ்தோத்ரம் (13) கங்கா ஸ்தோத்ரம் (14) மீனாக்ஷி ஸ்தோத்ரம் (15) நாராயண ஸ்தோத்ரம் (16) பத்ரிநாத் சென்ற சங்கரர் அங்கு பத்ரிகாவனத்தில் பரந்தாமன் தரிசனம் முடித்து பாடிய ஸ்தோத்திரம்" ஷட்பதீ ஸ்தோத்ரம் (17) வேங்கட மலையில் திருப்பதி பெருமாளின் திவ்ய தரிசனத்தின் பின் பாடிய ஸ்தோத்ரம்" விஷ்ணு பாதாத் கேசாந்த ஸ்தோத்ரம் (18) சிவ அபராத க்ஷமாபண ஸ்தோத்ரம் (19) உமா மஹேஸ்வர ஸ்தோத்ரம் (20) விஷ்ணு புஜங்கப்ரயாத ஸ்தோத்ரம் (21) சிவபாதாதி சேகாந்த வர்ணன ஸ்தோத்ரம் (22) சிவகேசாதி பாதாந்த வர்ணன ஸ்தோத்ரம் (23) குருபாதுகா பஞ்சக ஸ்தோத்ரம்.*

**4. அஷ்டகங்கள் :** *(1) கணேச அஷ்டகம் (2) அன்னபூர்ணா அஷ்டகம் (3) ஜகந்நாத அஷ்டகம் (4) காசி அஷ்டகம் (5) ஸ்ரீ திரிபுரசுந்தரி அஷ்டகம் (6) ஸ்ரீப்ரமாரம்ப அஷ்டகம் (7) நதிகளின் பேரில் கங்காஷ்டகம் (8) யமுனாஷ்டகம் (9) நர்மதாஷ்டகம் (10) மணிகர்ணிகாஷ்டகம் (11) ஸ்ரீ தட்க்ஷிணாமூர்த்தி அஷ்டகம் (12) சங்கரர் குருவின் முன் சந்யாசம் மேற்கொண்ட போது குருவை வணங்கி பாடியது "குரு அஷ்டகம்" (13) ஆதி சங்கரர் குருவைத் தேடி போனபோது "நர்மதை" பொங்கி எழ அதை தன் கமண்டலத்தில் அடக்கி பின் குரு "கோவிந்த பகவத் பாதரை சந்திக்கிறார். குரு சங்கரரைப் பார்த்து "மகனே யார் நீ"" என்று கேட்டபோது சங்கரர் திருவாய் மலர்ந்து அருளியதுதான் "நிர்வாண அஷ்டகம்" (14) கால பைரவாஷ்டகம் (15) ஜகந்நாதாஷ்டகம் (16) பாண்டுரங்காஷ்டகம் (17) ஸ்ரீ கிருஷ்ணாஷ்டகம் (18) கோவிந்தாஷ்டகம் (19) ஸ்ரீ தட்க்ஷிணாமூர்த்தி அஷ்டகம் (20) அன்னபூர்ணாஷ்டகம் (21) மீனாக்ஷி அஷ்டகம் (22) ராஜராஜேஸ்வரி அஷ்டகம் (23) அச்யுதாஷ்டகம் (24) ஹரிசரணாஷ்டகம் (25) ரங்கநாத அஷ்டகம் (26) புஷ்கர அஷ்டகம் (27) சிவாஷ்டகம் (28) அம்பா அஷ்டகம் (29) கல்யாணவிருஷ்டி அஷ்டகம் (30) காமபீமாஷ்டகம் (31) தன்யாஷ்டகம் (32) ஸ்வரூபானு*

*சந்தானாஷ்டகம் (33) அச்பதாஷ்டகம்*

**5. ஸ்தவம் :** *(1) கல்யாண வ்ருஷ்டி ஸ்தவம் (2) மந்த்ர மாத்ருக்கா புஷ்பமாலா ஸ்தவம் (3) திரிபுர ஸுந்தரி வேத பாத ஸ்தவம்*

**6. ஸ்துதிகள் :** *(1) ஸ்வர்ணமாலா ஸ்துதி (2) ஹரிமீடே ஹரி ஸ்துதி (3) தச ஸ்லோகீ (4) ஏகஸ்லோக மாத்ரு ஸ்துதி (5) தர ஸ்லோக ஸ்துதி*

**7. வர்ணமாலா :** *(1) ஸ்ரீ சிவ பாதாதி கேசாந்த வர்ணமாலா (2) ஸ்ரீ சிவ கேசாதி பாதாந்த வர்ணமாலா (3) தட்க்ஷிணாமூர்த்தி வர்ணமாலா (4) சியாமளா நவரத்னமாலிகா (5) ப்ரச்னோத்ர ரத்னமாலிகா (6) நவரத்ன மாலிகா*

**8. பஞ்சகம் :** *(1) மாத்ரு பஞ்சகம் (2) லலிதா பஞ்சகம் (3) தேவீ பஞ்சகம் (4) காசி பஞ்சகம் (5) மனீஷா பஞ்சகம் (6) மாயா பஞ்சகம் (7) யதி பஞ்சகம் (8) உபதேச பஞ்சகம் அல்லது சாதனா பஞ்சகம். "ரக்தாக்ஷி" ஆண்டில் வைகாசி மாதத்தில் சுக்கிலபக்ஷ ஏகாதசி தினத்தில் தன் சீடர்களை கூட்டிவைத்து ஐந்து ஸ்லாகங்களை பாடினார். அதுதான் "உபதேச பஞ்சகம்"*

**9. மானஸ பூஜை :** *(1) ம்ருத்யுஞ்ச மானஸீக பூஜை (2) சிவ மானஸ பூஜை (3) பகவதி மானஸ பூஜை (4) திரிபுர ஸுந்தரீ மானஸ பூஜை (5) பகவான் மானஸ பூஜை (6) நிர்குண மானஸ பூஜை (7) தேவீசதுக்ஷஷ்டி உபசார பூஜை*

**10. லஹரீ :** *(1) சிவானந்த லஹரீ. சங்கரர் ஸ்ரீசைலம் சென்றபோது சிவ ஆனந்த வெள்ளம் "மல்லிகார்ஜுனப் பெருமாள்" முன் பாடியதுதான் "சிவானந்நத லஹரீ. (2) ஆனந்த லஹரீ (3) சௌந்தர்ய லஹரீ - அன்னை அகிலாண்டேஸ்வர்யின் அழகு வெள்ளத்தில் பொங்கி எழுந்தது "சௌந்தர்யலஹரி" (4) ஜீவன் முக்தாநந்த லஹரீ*

**11. பாஷ்யங்கள் :** *(1) பிரம்ம ஸுத்ரம் (2) ஈசாவாக்ய உபநிஷத் பாஷ்யம் (3) ஐத்திரியோ உபநிஷத் பாஷ்யம் (4) கடோபநிஷத் பாஷ்யம் (5) கேனோபநிஷத் பாஷ்யம் (6) நரஸிம்ம பூர்வாடபாணி உபந்ஷத் பாஷ்யம் (7) பிரஹதாரண்யக உபநிஷத் பாஷ்யம் (8) மாட்டுக்ய உபநிஷத் பாஷ்யம் (9) முண்டகோ உபநிஷத் பாஷ்யம் (10) ஆபஸ்தம்ப அத்யாத்ம படல பாஷ்யம்*

**12. மற்றவை :** *(1) கௌரீ தசகம் (2) ப்ரௌடானுபூத் (3)*

*பஜகோவிந்தம் (மோஹமுத்கரம்) (4) அநாத்மஶ்ரீ விகர்ஹணம் (5) அத்வைதானுபூதி (6) தஸஸ்லோகி (7) ப்ரஹ்மாநுசித்தனம் (8) ஸ்வாத்மப்ரகாசிகா (9) லகுவாக்ய வ்ருத்தி (10) நிர்வாண மஞ்சரி (11) யோகதாராவ (12) வாக்யவ்ருத்தி (13) தத்போபதேசம் (14) ஏகச்லோக ப்ரகரணம் (15) விவேக சூடாமணி (16) 27 நட்க்ஷத்திரங்களுக்கான ஸ்லோகங்கள்*

*அப்பப்பா எத்தனை எத்தனை ஸ்லோகங்கள். அத்தனையும் ரத்னங்கள். இந்த ரத்னங்கள் அருளிய ஶ்ரீ ஆதி சங்கரரின் பாதக்கமலங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.*

*இந்த ஸ்லோகங்களை தினமும் பாராயணம் செய்தால் சகல காரியங்களிலும் வெற்றி உண்டாகும்.*

**ஹர ஹர ஷங்கர! ஜய ஜய ஷங்கர!**

**தொகுப்பு : டி. சூரியநாராயணன்**

## வேதபாரதி ONLINE வழியாக

*ஸம்ஸ்க்ருத வகுப்புகள் நடைபெறுகின்றன.*

*நல் ஆசிரியர் : ஶ்ரீ முரளிதரன், மதுரை*


**ரிக், யஜுர், ஸாம வேத வகுப்புகள் :**

**ஸந்த்யா வந்தன வகுப்குகள்** *நடந்து வருகிறது.*

*அத்யாபகர் : ப்ரம்ஹஶ்ரீ கைலாசநாத கனபாடிகள்*

*பொறுப்பாளர்கள் : ஶ்ரீ ராமகிருஷ்ணன், ஶ்ரீ சங்கர்.*


99940 89133 99940 89140



**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி

பகுதி - 6



சுக பிரம்ம ரிஷி

"கோகர்ணன்" கதை – சென்ற மாதம் தொடர்ச்சி...

"கோகர்ணன்" தன் தந்தை ஆத்மதேவனிடம் "காட்டிற்குச் சென்று தவத்தை மேற்கொள்ளுங்கள்" என்றான் அவரும் அப்படியே செய்து முக்தி அடைந்தார்.

"கோகர்ணன்" கயாவில் இருந்தபோது தன் ஊர்க்காரர்கள் சிலரைப் பார்த்தான். அவர்கள் ஊரில் துந்துலியும், துந்துகாரியும் இறந்துவிட்ட செய்தியைத் தெரிவித்தார்கள். மிகவும் வருந்திய கோகர்ணன் அவர்களுக்கு கயாவிலேயே செய்ய வேண்டிய அந்திம கிரியைகளைச் செய்துவிட்டு தன்னுடைய சொந்த ஊருக்குத் திரும்பி வந்தான். தன்னுடைய வீடு மிகவும் பாழடைந்து இருந்ததைக் கண்டான். வீட்டு திண்ணையில் அமர்ந்து கண்களை மூடி ஜபம் செய்யத் துவங்கினான். அப்போது யாரோ ஊளையிடுவது போலவும் அலறுவது போலவும் கேட்டது. கண்களைத் திறந்து பார்த்த கோகர்ணனின் எதிரில் புகைபோல் ஒரு உருவம் இருந்தது. தன்னுடைய தீர்த்த பாத்திரத்திலிருந்து சிறிது நீரை அந்த உருவத்தின் மீது தெளித்தபோது அது பேச ஆரம்பித்தது. அது "கோகர்ணா" நான்தான் உன் அண்ணன் "துந்தகாரி". நான் செய்த பஞ்சமாபாதங்களால் நான் கொலை செய்யப்பட்டு ப்ரும்மராக்ஷஸனாகிவிட்டேன். உங்களுக்கெல்லாம் பாவம் செய்துவிட்டேன். இந்த அவஸ்தை தாங்க முடியவில்லை. இதிலிருந்து என்னை காப்பாற்று என்று அழுதது.

"கோகர்ணன்" சாஸ்த்ர நூல்களைப் படித்துப்பார்த்தான். வழி கிடைக்கவில்லை. ஊரில் உள்ள சான்றோர்களையும்

சந்தித்து சாஸ்திரத்தில் ஏதாவது வழி இருக்கிறதா என்று கேட்டான். அவர்கள் கயா ஸ்ராத்தத்தை விட உயர்ந்த மார்க்கம் ஏதும் இல்லை என்றார்கள். அப்போது அங்குவந்த ஒரு ஸாது கோகர்ணனைப் பார்த்து "ஸூர்ய பகவான் எல்லா சாஸ்திரங்களையும் அறிந்தவர் அவரை உபாசித்தால் வழி கிடைக்கும்" என்று கூறினார். அதைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்த கோகர்ணன் உடனே கோடிக்கணக்கில் "காயத்ரீ" மந்திரத்தை ஜபித்து சூர்ய மந்திரங்களையும் ஜபித்தான். சூரியபகவான் அவன் முன் ப்ரத்யக்ஷமானார். கோகர்ணன் அவரை நமஸ்கரித்து தன் சகோதரன் துந்துகாரிக்கு ஒரு கதி சொல்ல வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்தான். சூரியபகவான் கோகர்ணனிடம் "கோகர்ணா நீ உன் தந்தையிடம் ஸ்ரீமத் பாகவதம் பாராயணம் செய்யச் சொன்னதால்தானே அவர் மோட்க்ஷம் அடைந்தார். அதே உபாயம்தான் உன் சகோதரன் துந்துகாரிக்கும் துந்துகாரியை ஏழு கணுக்கள் உள்ள ஒரு மூங்கிலில் ஆவாஹம் செய்து, ஏழு நாட்கள் ஸ்ரீமத் பாகவத பாராயணம் செய்து அதை துந்துகாரி கேட்கும்படி செய்தால் உன் சகோதரனுக்கு நற்கதி கிடைக்கும்" என்று கூறி ஆசிர்வதித்தார்.

சூரிய பகவானின் யோசனையைக் கேட்ட கோகர்ணன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து பெரிய பந்தல் போட்டு அதன் நடுவில் ஏழு கணுக்கள் உள்ள மூங்கிலை நட்டு ஊர் முழுவதும் கூட்டி வெகு விமரிசையாக ஸ்ரீமத் பாகவத பாராயணம் செய்தான். முதல் நாள் பாராயாணம் முடிந்ததும் மூங்கிலில் ஒரு கணு வெடித்தது. இரண்டாம் நாள் இரண்டாம் கணு. இப்படியே ஏழு நாட்களும் தினமும் ஒரு கணு வீதம் ஏழு கணுக்களும் வெடித்ததும் அதிலிருந்து ஒரு ஸுந்தர புருஷன் தோன்றினான். அவன் பக்கத்தில் ஒரு திவ்ய விமானமும் தோன்றியது. அந்த புருஷன் கோகர்ணனை நோக்கி "தம்பி நான்தான் துந்துகாரி, நான் ராக்ஷஸ அவஸ்தையிலிருந்து விடுதலை ஆகிவிட்டேன். உனக்கு என் நமஸ்காரங்கள். நாம் பரமபதம் செல்ல விமானமும் வந்துவிட்டது" என்றான்.

இதைக் கேட்ட கோகர்ணன் மிகவும் சந்தோஷப்பட்டான். ஆனால் அவனுக்கு ஒரு சந்தேகம்

எழுந்தது. அவன் துந்துகாரியை விமானத்தில் அழைத்துச் செல்ல வந்தவர்களை நோக்கி “என் சகோதரனுக்கு வைகுண்டம் கிடைத்தது எங்கள் எல்லோருக்கும் சந்தோஷம், ஆனால் என்னுடன் சேர்ந்து இந்த ஊர்மக்கள் அனைவரும் ஏழு நாட்கள் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டோம், ஆனால் துந்துகாரிக்கு மட்டும் பரமபதம் கிடைத்துள்ளது எங்களுக்கு பரமபதம் கிடைக்கவில்லையே” என்றான்.

அதற்கு அந்த சேவகர்கள் “துந்துகாரி மிகுந்த ஏக்கத்தோடு தினமும் ஒரு ஸ்லோகம் கூட விடாமல் ச்ரத்தையுடன் ஸ்ரீமத் பாகவதம் கேட்டான். அதனால் உடனே மோக்ஷம் கிடைத்துவிட்டது. மற்றவர்கள் அவனைப்போல் ஸ்ரத்தையுடன் கேட்கவில்லை. நீங்களும் அவனைப்போல் பக்தியுடன் கேட்டால் உங்களுக்கும் பரமபதம் கிடைக்கும்” என்றார்கள்.

துந்துகாரியைப் போல் நாமும் ஸ்ரீமத் பாகவதத்தை ஏழு நாட்களும் ஸ்ரத்தையுடனும், பக்தியுடனும் கேட்டால் நாமும் மோக்ஷம் அடையலாம். தொடரும்...

## வருந்துகிறோம்

1. வேதபாரதி அமைப்பிற்கு உறுதுணையாக உள்ள அமுத சுரபி ஆசிரியர் ஸ்ரீ திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் குமாரர் செல்வன் அரவிந்த் அவர்கள் காலமானதை கேட்டு பெருந்துயர் கொண்டோம். ஸ்ரீ திருப்பூர் கிருஷ்ணன் குடும்பத்தாருக்கு மனோபலத்தையும், தேக ஆரோக்கியத்தையும் கொடுக்க இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.

2. ஊரப்பாக்கம் வேதபாரதி நிர்வாகிகளில் ஒருவராகிய ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் அவர்களின் தந்தை ஸ்ரீமான் ராமஸ்வாமி அவர்கள் இறைவன் திருவடி சேர்ந்தார்கள். அன்னாரின் குடும்பத்திற்கு வேதபாரதி சார்பில் மனோபலத்தையும், தேக ஆரோக்கியத்தையும் கொடுக்க இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.

3. திருப்பூர் சூர்யா ஜுவல்லர்ஸ் உரிமையாளர் ஸ்ரீ சுகுமாரன் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். வேதபாரதியின் ஆரம்ப காலம் முதல் பெரும் ஆதரவு அளித்துவந்த நல்உள்ளம் கொண்ட சிறந்த தெய்வபக்தர். அவர் ஆன்மா சாந்தியடையவும், அவர்கள் குடும்பத்தாருக்கு மனோபலத்தையும், தேக ஆரோக்கியத்தையும் கொடுக்க இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## ஸ்ரீ காயத்ரீ

*சென்றமாத தொடர்ச்சி..*



*உபநயனம் ஆன உடனே காயத்ரீ மந்த்ரத்தை உபதேசம் செய்ய வேண்டும். அன்றைய தினம் முதல் ஒரு நாள் கூட தவறாமல் அதை ஜபிக்க வேண்டும். இதற்கான பலனை ஸூதஸம்ஹிதையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது “சந்தேகத்துக்கு காரணம் எதுவும் இல்லாமல் அவன் எல்லா விருப்பங்களையும் அடைகிறான்” என்று பொருள். காயத்ரீ உபாஸனையால் ஜனங்கள் சர்வாபீஷ்டங்களையும் அடைவார்களாக!.*

---

## மே மாதம் நடந்த முக்கிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| *01.05.2021* | *ரிக் வேத ஸந்த்யா வந்தன பயிற்சி வகுப்பு* |
| *02.05.2021* | *ரிக் வேத ஸந்த்யா வந்தன பயிற்சி வகுப்பு* |
| *9.05.2021* | *மே மாத வேதபாரதி ஆலோசனைக் கூட்டம்* |
| *13.05.2021* | *பூஜ்ய ஸ்ரீ தேனி வேதபுரீ ஓங்காரனந்தா மஹா ஸ்வாமிகள் ஸ்ரத்தாஞ்சலி* |
| *17.05.2021* | *ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் - 300 வித்யாத்ரிகள் கலந்து கொண்டனர்* |
| *22.05.2021* | *தெலுங்கு ஸம்பரதாய சந்த்யா வந்தன* |
| *23.05.2021* | *பயிற்சி வகுப்பு* |
| *23.05.2021* | *பெண்மையைப் போற்றுவோம் - சிறப்பு பெண்கள் நிகழ்ச்சி* |
| *26.05.2021* | *காஞ்சி மஹா ஸ்வாமிகள் ஜெயந்தி விழா “மஹன்யாச ருத்ரஜபம் - 380 பேர் கலந்து கொண்டு ஆசி பெற்றனர்.* |


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
Contact
9952972436 / 7824807801
www.woppershop.com
WOPPER
Fluid Chemistry

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**



V.KRISHNAMOORTHY
Managing Trustee

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"

இந்நூற்றாண்டின் மாபெரும் துயரமான கொரோனா எளிய மக்களை பெரிதும் பாதித்து வருகிறது. இத்துயரிலிருந்து மீள்வதற்கும் - வாழ்வதற்கும் வழி தெரியாமல் தவிக்கும் எளிய மக்களின் பசி தீர்க்கும் பணியை கொரோனா தொடங்கிய காலம் முதல் இன்றுவரை தொடர்ந்து செய்து வரும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ண மூர்த்தி அவர்கள், சமுதாயத்தின் பல தளங்களில் இருக்கும் ஏழை, எளிய மக்களுக்கு தரமான (5 கிலோ) அரிசி, Sunflower Oil, மளிகைப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கி வருகிறார். அவ்வகையில் 5.6.2021 அன்று கிழக்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அலுவலகத்தில் எளிய மக்களுக்கு "அரிசி மற்றும் முதல் தர துவரம் பருப்பு" வழங்கப்பட்டது. கொரோனா பேரிடர் நம்மை விட்டு நீங்கும் வரை ஸ்ரீ மாதா டிரஸ்டின் பசி தீர்க்கும் பயணம் தொய்வின்றி தொடரும்.










இதுவரை சுமார் **24,600 தரமான ஈரடுக்கு பருத்தி துணி முகக்கவசங்கள்; 74,500 கிலோ தரமான அரிசி; 2800 கிலோ முதல் தர துவரம் பருப்பு; 900 லிட்டர் "Gold Winner" Sun Flower Oil** ஆகியன ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மாபெரும் மக்கள் சேவையில் ஸ்ரீ மாதா டிரஸ்டுடன் இணைந்து பயணிக்க விரும்பும் நல்லவர்களின் நன்கொடைகளையும், நல்லாசிகளையும் என்றென்றும் மனதார வேண்டுகிறோம். கொரோனாவை முறியடிக்க எதிர்கொள்ளும் போரில் சிக்கித் தவிக்கும் எளிய மக்களை தங்களின் உறவுகளாக எண்ணி உதவி செய்யுங்கள். உங்கள் நன்கொடையில் ஒரு ரூபாய் கூட வீணாகாமல் அது எளிய மக்களைச் சென்றடையும் என உறுதியளிக்கிறோம். இதன் மூலம் காலத்தால் அழியாத செல்வமான பெரும் புண்ணியம் உங்களையும், உங்கள் சந்ததியினரையும் வந்து சேரும் என்பது எங்களது உறுதியான நம்பிக்கை. **சிந்தியுங்கள் !**

**செயல்படுங்கள் !! உண்மையான இன்பம் இதுவே என்று உணருங்கள் !!!**



மக்கள் பணியில்
ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி
திரு **அமெரிக்கன்** அவர்கள்





நமது ஆடிட்டர் **திரு சுந்தரராஜன்** மற்றும் சக நண்பர்கள் இணைந்து கொரோனா கால நிதியுதவியாக சுமார் 800 கிலோ அரிசி வாங்குவதற்கான நன்கொடை வழங்கினர். திரு சுந்தரராஜன் அவர்கள் தனது கரங்களினால் எளியோருக்கு "அரிசி - துவரம்" பருப்பு வழங்கி மகிழ்ந்தார்.

கிழக்கு தாம்பரத்தைச் சேர்ந்த மனித நேய பண்பாளரான திரு **வி.சேகர்** அவர்கள் **M/s.Analogic Controls India Ltd., Hyderabad** நிறுவனத்திடமிருந்து அனுப்பப்பட்ட மிகவும் தரமான 2000 என்-95 முகக்கவசங்களை எளிய மக்களுக்கு இலவசமாக வழங்கிட





ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் வழங்கி மகிழ்ந்தார்.

மேலும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் செய்து வரும் பல்வேறு நலத்திட்டங்களுக்கு, தனது நன்கொடையாக ரூ.10,000/- வழங்கி மகிழ்ந்தார்.

**இந்த இரு நல்ல உள்ளங்களுக்கும் சங்கமிக்க இணைப்பு பாலமாக திகழ்ந்த திரு ராம்குமார் அவர்கள்**



பேரிடர் மற்றும் பெருந்தொற்று காலங்களில் மழை - வெயில் பாராமல் முன்னின்று களப் பணியாற்றும் காவல்துறை நண்பர்கள், ஸ்ரீ மாதா டிரஸ்ட் சார்பாக என்-95 முகக்கவசங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.

Account Name : SRI MATHA TRUST

Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20

Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. 9500001065 / 9003247857

vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்


*சென்றமாத தொடர்ச்சி....*

*தீவிர தேச பக்தர்கள்கூட, இந்த மேலைநாட்டு ஆசிரியர்களின் அறிவாற்றலில் முழுமையான நம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ளார்கள். மேனாட்டு ஆசிரியர்களின் முடிவுகளை முழுமையாக ஏற்கிறார்கள் அவர்கள். அவர்களின் கருத்துப்படி, வேதங்கள், மனிதனால் இயற்றப்பட்டவை; ஏறக்குறைய கி.மு. மூன்றாம் - ஐந்தாம் நூற்றாண்டுகளில் அவை இயற்றப்பட்டவை. வேதங்கள் மீது மிகுந்த பக்தி கொண்டவர்களைக்கூட இந்த ஆய்வாளர்கள் நம்ப வைத்துள்ளார்கள். இந்த ஆய்வாளர்களின் முடிவுகளை அவர்கள் முழுமையாக நம்புகிறார்கள். இந்த முடிவுகள் முரண்பாடுகள் கொண்டனவாய் இருப்பதைக்கூட அவர்கள் பொருட்படுத்துவதில்லை. நம் பாரம்பரியக் கருத்துகளுக்கு எதிரான மேனாட்டு ஆசிரியர்களின் ஆட்சேபனைகள், கோழைத்தனமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆய்வாளர்கள், வேதங்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டன என்று சொல்கிறபோது, வேதங்களின் நம்பிக்கையும் மரியாதையும் கொண்டவர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? மிஞ்சிப்போனால், வேதங்களின் தோற்றக்காலத்தை, ஆய்வாளர்கள் சொல்லுகிற காலத்திற்குச் சில நூற்றாண்டுகள் முன்னதாகச் சொல்லுவார்கள். ஆனால், இவ்வளவு விரிவான பிரம்மாண்டமான, பல சூக்ஷ்மங்கள் மிகுந்த படைப்பு மனிதனுடையதாக இருக்க முடியுமா என்ற கேள்வியைக்கூட அவர்கள் எழுப்புவதில்லை. இந்தத் தவறைச் செய்திருக்கிறவர்கள், சாதாரணமானவர்கள் அல்லர். அவர்கள் மிக்க அறிவுக்கூர்மை படைத்தவர்கள். அவர்கள் சமுதாயத்திற்காகத் தங்களுடைய எல்லாவற்றையும் தியாகம் செய்திருக்கிறார்கள்.*

*தொடரும்...*

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## ஆனந்தத்தின் மூலகாரணம்



ஒருவன் தன் நண்பனிடம் ‘‘எனக்கு இனிப்புப் பக்ஷணங்கள் உண்பதில் அலாதிப் பிரியம். எனவேதான், இனிப்புத் தின்பண்டங்களை யார் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தாலும் நான் அவற்றை வாங்கிக்கொள்ள சிறிதும் தயங்குவதில்லை. மேலும், தினமும் ஏதாவது ஓர் இனிப்புப் பக்ஷணம் சாப்பிட்டுவிட வேண்டுமென்று வழக்கமாகவும் கொண்டுள்ளேன்’’ என்று பெருமையுடன் கூறினான். சில நாட்கள் சென்றன. அவனுக்குக் காய்ச்சல் ஏற்பட்டு படுத்தபடுக்கையானான். அவனைப் பரிசோதித்த மருத்துவர், அவனுக்கு சர்க்கரை வியாதியென்றும் மற்றும் தொற்று நோயால் காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இதைப் பற்றியெல்லாம் கேள்விப்படாத அவனுடைய நண்பன், “நான் உனக்காக இந்தப் பக்ஷணங்களை வாங்கி வந்திருக்கிறேன்’’ என்று சொல்லி அவனிடம் கொடுத்தான். இதைக் கேட்டு திடுக்கிட்ட அந்த நோயாளி, “அய்யோ! இனிப்பா? வேண்டவே வேண்டாம். முதலில் இந்தப் பொட்டலத்தை இங்கிருந்து அப்புறப்படுத்து. எனக்கு இனிப்புப் பக்ஷணங்களின் மேல் இருந்த ஆசை போய்விட்டது. அவை இனிமேல் எனக்கு விஷத்தைப் போலாகும்’’ என்று மனம் குமுறிக் கூறினான்.

ஒரு சமயத்தில் சந்தோஷத்தைக் கொடுத்த ஒரு பொருள், மற்றொரு சமயத்தில் துக்கத்தைக் கொடுப்பதாக உள்ளது. என்பதையே இக்கதை மூலம் நாம் அறியலாம். சந்தோஷத்தைக் கொடுக்கும் குணம் இனிப்புப் பண்டத்திற்கு இயற்கையாகவே இருந்ததேயானால். அவன் அவற்றை எப்பொழுதுமே வெறுக்கக்கூடாது.

தொடரும்...

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 6

*மூன்றாவதுப் பிரச்சனையான தனிமை மற்றும் மன நலப் பாதிப்பு பற்றி பேசுவோம்.*

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு" (குறள் 786 – அதிகாரம் 79)**

*"முகமும் முகமும் பார்த்து மகிழ்வது மட்டும் நட்பாகாது. மனமும், அகமும் ஒத்து மகிழ்வது தான் நட்பு" என்கிறார் வள்ளுவர்.*

*அதாவது உணர்வுகளில் ஓர் ஒற்றுமையின்றி, பொருத்தமின்றி கூடி குலாவுவதில் என்ன பயன் என்பதை உங்கள் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுவதற்கு "ஆன்லைன்" நட்புகள் வெகுவாக உதவும்!*

*இன்று இந்தியா முழுவதும் 13 வயது பெண்கள் முதல் "ஆன்லைன்" கூடா நட்பு, ஓடிப் போவது, பெற்றோர்கள் பதறுவது, போலீஸ் தேடுவது இவை தினசரிகளில் தினமும் நாம் படிக்கும் தகவல்கள் முடிவு "ஆன்லைன் நட்பு"*

*கூடிப் பேசி, சிரித்து, அழுது, சண்டைப் போட்டு, "கடி ஜோக்" கூறி அதையெல்லாம் அம்மாவிடம் பகிரும் பொழுது, தாய் என்பவள் முகபாவத்திலேயே சில விஷயங்களை உணர்ந்து, "கத்திரி" போட்டு எந்த நட்பு சரியானது என்று எடுத்து கூறும் வழக்கம் 2020 மார்ச் மாதத்தோடு முடிந்துவிட்டது.*

*இன்று தனிமை, மன நலப் பாதிப்பு, ஆசிரியர் "கட கட" என்று படிக்கும் பாடத்தை "லேப் டாப்" பில் கேட்பது போல பாவ்லா செய்து கொண்டே, டேபிளுக்கு கீழே "வாட்ஸ் ஆப்" மூலம் அறிமுகப் பரிமாற்றங்கள் நடக்கும் காலம் தொடங்கிவிட்டன.*

*தாய், தந்தையரும்* 'Work From Home'(WFH) *இல்*

இருப்பதால், மனமும், புத்தியும் ஓய்ந்து விடுகிறது. குழந்தைகளின் “லேப் டாப்” மற்றும் கைபேசியை தோண்டிப் பார்க்க நேரமேது.

எப்பொழுது பள்ளிச் செல்வது, கல்லூரிகள் திறக்கும், ஜாலியாக நண்பிகளோடும், நண்பர்களோடும் பேசப் போகிறோம் எனும் ஏக்கம் இன்று ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ளது உண்மை தானே. மீண்டும் ஒரு முறை திருக்குறளைப் படித்துப் பாருங்கள்.

இந்த தனிமையை, அதனால் ஏற்படும் மன நலப் பாதிப்பு சிறுவர், சிறுமியரை தேவையற்ற நட்புகளில் போகத் தூண்டுகிறது. இதைப் போக்குவது உங்கள் தலையாய கடமை. அவர்களுக்கு பிடித்த, உங்கள் பட்ஜெட்டிற்கு ஏற்ற பட்டறைகள் ஆன்லைனில் (Workshops) தேடிப் பிடியுங்கள்.

'Study Videos' என்று ஒன்று முளைத்துள்ளது. இதில் ஏகப்பட்ட மாணவ மணிகள், தாங்கள் எப்படிப் பார்க்கிறோம், தங்களின் தனித்துவமான நேர மேலாண்மை, தங்கள் டேபிள் மீது எத்தகையப் புத்தங்களை வைத்து தன்னை ஊக்கப்படுத்திக் கொள்கிறார்கள் என்றெல்லாம் உலகம் முழுவதிலிருந்து அனுப்புகிறார்கள், கேமரா பயம், வெப்கேமராவிற்காக தேவையற்ற அலங்காரங்கள் என்று எதுவுமின்றி மிகத் தெளிவாக பேசுகிறார்கள். இதன் மூலம் மாணவர்களுக்கு கிடைக்கும் ஊக்கம் வெகு அருமை. இவற்றை'Study Vlogs' என்று கூறுகிறார்கள்.

என் பேத்தி (கல்லூரி முதலாமாண்டு) மூலமாக கண்டு ரசித்தேன். உங்கள் முகம் கேமராவின் முன் வராமலும் நீங்கள் படிக்க ஏற்படும் நிகழ்வுகளை அனுப்பலாம்.

சோம்பேறித்தனமாக இருப்பது இன்று அனைத்து வயதினருக்கும் இலகுவாக உள்ளது. “எங்கும் செல்ல வேண்டாம், எதுவும் செய்ய வேண்டாம், யாரும் வர வேண்டாம்” எனும் தாரக மந்திரம் “கொரோனா மஹாமாரி” காலகட்டத்திற்கு ஏற்றதாக உள்ளது. அதை மீறி வாழ மன நலம் மிகச் சிறப்பாக செயல்பட வேண்டும்.

கீழ்காணும் சட்டத்திட்டங்களை கட்டாயமாக ஒவ்வொரு குடும்பமும் பின்பற்றவேண்டும்.

*1. தினமும் 15 நிமிட நடை / யோகா அவசியம்.*

*2. ஒவ்வொரு நாளும் உங்கள் "ஸ்மார்ட் போன்" உங்கள் பார்வையில் ஒரு சில மணி நேரங்கள் படாமல் வைத்து விடுங்கள்.*

*3. தேவையற்றஆப்ஸ், அழைப்புகள், விளம்பரங்களை நீக்கிவிடுங்கள்.*

*4. கையில் எப்பொழுதும் சதாசர்வ காலமும் தூக்கிக் கொஞ்சாதீர்கள்.*

*5. எதற்கெடுத்தாலும் "ஆன்லைன்" என்ற நூல் பிடிக்காமல், நேரம், பல்லாங்குழி, கோலம் வரைவது. பூவேலை என்று பழைய விஷயங்களை தூசித் தட்டி எடுங்கள்.*

*6. ஞாயிறு அன்று வீட்டில் யாரும் "ஸ்மார்ட் போன்" பக்கம் செல்லாதீர்கள்.*

*7. அன்றையப் பணியை அன்றே முடித்து விடுங்கள்.*

*பலருக்கு காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை "ஆன்லைன்" பணிகள் தொடர மிகுந்த அலுப்பு ஏற்படுகிறது.*

*இதிலிருந்து வெளிவர 20-20-20, டிஜிட்ல் டாக்ஸ் போன்றவிஷயங்களை அடுத்த மாதம் காண்போம். உடல் நலத்தை பேணுவதை விட ஒருபடி அதிகமாக மன நலம் பேணுவது மிக மிக முக்கியம்.*

தொடரும்....



# "பாரத தேசப் புனித யாத்ரை"

திருச்சி **K.கணேசன்**

*'அத்யாயம் - 13'*

*அன்று மாலை 4.00 மணிக்கு ரிக்ஷாவில் கிளம்பி* Chowk *வந்து அங்கிருந்து நடந்து காசி விஸ்வநாதர் கோவில் வழியாக கோவா கல்லி, சுவார் கல்லி (ராணி கிணறு) தாண்டி மாதா மந்திர் சென்றோம். பின் அங்கிருந்து நடந்தே பஞ்சக்ரோஷ மந்திர் வந்தடைந்தோம்.*

**பஞ்ச க்ரோஷ மந்திர் :** *காசி காண்ட் மிகவும் சிறப்பித்துக் கூறுகின்ற தலம் பஞ்சக்ரோஷ க்ஷேத்ரம். இது ஒரு புனிதமான இடமாகக் கருதப்படுகிறது. காசி காண்ட் அத்யாயம் 26-ல் இந்தப்பகுதி பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் அபிமுக க்ஷேத்ரம் பற்றியும் விஸ்வேஷ்வரர் பற்றியும் தெரிவிக்கிறது. இந்த பஞ்சக்ரோஷ க்ஷேத்ரம் சிவனுக்கு மிகவும் உகந்த இடம் என்று தெரிவிக்கிறது. இதைப் பற்றி வேறு பல புராணங்களிலும் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.*

*காசி காண்ட் 100 ஆவது அத்யாயத்தில் பல முக்கியமான யாத்ரா பற்றி தெரிவிக்கிறது. இன்றும் சில ஆன்மீக குழுக்கள் யாத்ரையாக செல்லும் சில முக்ய யாத்ரா*

1. *ஏகதச (11) லிங்க யாத்ரா* 2. *பஞ்சக்ரோஷ யாத்ரா*
3. *கௌரி யாத்ரா* 4. *சூர்ய யாத்ரா* 5. *விஷ்ணு யாத்ரா*

*இவற்றில் முக்கியமான ஒரு யாத்ரா பஞ்ச க்ரோஷ யாத்ரா, காசி நகரைச் சுற்றி ஆன்மீக குழுக்கள் செல்லும் இந்த யாத்ரா, சுமார் 5 நாட்கள் நகரை வலம் வந்து 128 சிவாலயங்களை தரிசிப்பர். இந்த யாத்ரை சிறிது கடினமானது. அந்த காலத்தில் 5 நாட்களும் நடந்தே சென்றனர். இன்றைய காலகட்டத்தில் கார், ஆட்டோ, ரிக்ஷா & சில இடங்களில் நடந்தும் செல்கின்றனர்.*

*இந்த 128 சிவாலயங்களையும் தரிசித்த புண்ணிய பலனை ஒரே ஒரு கோவில் தரிசிப்பது மூலம் அடைய முடியும். ஒரே இடத்தில், வயதான மற்றும் உடல் முடியாத யாத்ரீகர்களின் பொருட்டு, இந்த 128 சிவ லிங்கங்களும் ஸ்படிகத்தினால் செய்யப்பட்டு ஒரு இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஒரு கோவில் இருக்கும் இடம் 5/32, கோவா கல்லி, காஷ்மீர் மால் ஹவாலி பின்புறம் உள்ளது. இந்த கோவிலை அடைய யாத்ரீகர்கள் ரிக்ஷாவில் சௌக்* (Chowk) *வரை வந்து பின்னர் நடந்து இந்த கோவிலை அடையலாம். அனைத்து*

*ரிக்ஷாவாலாக்களுக்கும் இந்த இடம் தெரியும். (இந்த காஷ்மீர் மால்ஹவாலி காசியில் மிகவும் பிரசித்தி பெற்ற இடம் என்பதால்) இந்த கோவிலை தரிசித்தால் 128 சிவாலயங்களை தரிசித்த புண்ணியம் உண்டு என்று பண்டிதர்கள் கூறுகின்றனர்.*

*இந்த பஞ்சக்ரோஷ கோவில் திறந்திருக்கும் நேரம் காலை 7.00 மணி முதல் 11.00 மணி வரை பிறகு மாலை 4.30 முதல் 8.00 வரை. இந்தக் கோவில் பல நூற்றாண்டுகளாக இருப்பதாக இங்குள்ள பண்டிதர்கள் கூறுகின்றனர். இந்த கோவிலை நாங்கள் ஒரு வீட்டிற்கு அருகில் படியேறி சென்று தரிசித்தோம். கோவிலுக்குள் நுழையும் வாசற்படி அருகில் இடப்புறத்தில் விநாயகரும் வலப்புறத்தில் சுப்ரமணியரும் மற்றும் சைடில் ஸ்ரீ ரெங்கநாதர் சயனகோலம், பிரம்மா & லெக்ஷ்மியுடன் இருக்கிறார். கர்ப்பகிரஹத்தில் 12 ஸ்படிக ஜோதிர் லிங்கத்தினை சுற்றி பல ஸ்படிக லிங்கங்கள் சிறிய சைஸில் வைக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் இருவரும் ஒரு கெண்டியில் கங்கா ஜலம் எடுத்து அபிஷேகம் செய்தோம். லிங்கங்களுக்கு பின்புறசுவற்றில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத பெருமாள் வீற்றிருக்கிறார். இந்த கோவில் இருக்கும் இடம் பண்டிதர்கள் மற்றும் வேத விற்பன்னர்களுக்கு தெரிகின்றது. ஆனால் பெரும்பாலான உள்ளூர் வாசிகளுக்கு கூட தெரியவில்லை. எங்களுக்கு இந்த கோவில் பற்றியும் அதன் பெருமை பற்றியும் நாங்கள் தங்கியிருந்த இடத்திலுள்ள சாஸ்திரிகளின் மச்சினர் திரு.வாசு மாமா கூறியதால் விசாரித்துக் கொண்டு சென்று தரிசித்தோம். பிறகு இரவு 7.00 மணிக்கு ரிக்ஷாவில் ஏறி தங்கியுள்ள இடம் வந்து சேர்ந்தோம். சிறிது ஓய்வு எடுத்து விட்டு இரவு சாப்பிட்டு விட்டு மறுநாள் இரயிலில் காலை டிபன் இட்லி, மதியம் புளிசாதம் & தயிர் சாதம் முதலியவற்றை நன்கு இலையில் பார்சல் செய்து வாங்கிக் கொண்டு அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு எங்களின் காசி மற்றும் கயா யாத்ரையினை நன்கு நடத்திக் கொடுத்ததற்காக சாஸ்திரிகள் வீட்டிலுள்ள அனைவருக்கும் நன்றி & நமஸ்காரங்களைத் தெரிவித்துவிட்டு ஆட்டோவில் இரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தோம். சுமார் 2 மணி நேரம் காத்திருந்து நாங்கள் ரிசர்வ் செய்து வைத்திருந்த இரயிலில் ஏறினோம்.*

*காசி / கயா யாத்ரா தொடர் அடுத்த இதழில் நிறைவு பெறும்.*

## வாசகர் கடிதம்

**தேனி பூஜ்யஸ்ரீ ஓங்காரநந்தா ஸ்வாமிஜீக்கு ஸ்ர்த்தாஞ்சலி**

*"ஆத்ம வித்யா" என்ற பெயரில் ஐந்து வருட* online *ஆன்மீக வகுப்புக்களை 2019 தமிழ் வருடப் பிறப்பு முதல் ஆரம்பித்தார்கள். தர்ம, உபாசந, வேதாந்த, பத வாக்ய மற்றும் யோக சாஸ்த்ரங்களைப் பயிற்றுவித்து வந்தார்கள்.*

*நாங்கள் இருவரும் இரண்டு வருடங்களாக இந்த வகுப்பினால் பயனடைந்தோம். ஸ்வாமிஜி சித்தியானது இந்து சநாதந தர்மத்திற்கு ஒரு பேரிழப்பு. ஸ்வாமிஜீக்கு எங்களின் சாஷ்டாங்க நமஸ்காரங்கள்.*

**K. கணேசன் & மீனலோசனி,** *திருச்சி - 18.*

---

*வணக்கம், டி.சூரியநாராயணன் அவர்களின் ஒரு நிமிடம் உங்களோடு (நட்பு), அட்டைப்பட விளக்கம் (அதிசங்கரர் ஜெயந்தி), ஸ்ரீமத் பகவத்கீதை பற்றிய விளக்கங்கள் மிக அருமை.*

*பரிதியின் ஸ்ரீமத் பாகவதம், காந்தலக்ஷ்மி சந்திரமௌலி அவர்களின் குழந்தை வளர்ப்பு, ஆதிரையன் அவர்களின் பசு பற்றிய சர்வரோக நிவாரணி மற்றும் புரோஹிதர் (சமாதான மன்றம்) பற்றிய தொகுப்பு மிக நன்றாக இருந்தது. மீ. சீனிவாசன் அவர்களின் பதினென் புராணங்கள் பற்றிய தகவல் மிகவும் சிறப்பாக இருந்தது. டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன் அவர்களின் சாதனைப் பறவைகள் தலைப்பில் நாதஸ்வர கலைஞர் பொன்னுத்தாய் பற்றிய தொகுப்பு ரொம்பவும் கருத்து மிக்கதாக இருந்தது. மொத்தத்தில் வேதபாரதி "மே" மாதத்திய செய்தி மடல் மணி மகுடம் என கூறவும் வேண்டுமோ. நன்றி.*

**என். கண்ணன், ஆயுள் உறுப்பினர்,** *வேளச்சேரி, சென்னை - 42.*

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## சாதனைப் பறவைகள் - 2

*(சாதாரணப் பெண்களின் அசாதாரண வெற்றிக் கதைகள்)*

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

# CA சிவபோகம் – பாரத தேசத்தின் முதல் பெண் தணிக்கையாளர்



ஆங்கரை எனும் அழகிய சிற்றூரில் பெரிய குடும்பத்தில் ஏழாவதாகவும் கடைக்குட்டிப் பெண்ணாகவும் பிறந்தவர் சிவபோகம். இந்தக் குழந்தையாவது ஆண் குழந்தையாக இருக்க வேண்டும் என்று ஏங்கிய பெற்றோர்களுக்கு இந்த தைர்ய லக்ஷ்மிதான் அவதரித்தாள். நடை, உடை (கதர்), பாவனையில் எளிமையாகவே கடைசி வரையிலும் வாழ்ந்தவர். தனது வாழ்க்கையில் மகா புத்திசாலியாகவும், திறமைசாலியாகவும், சமூக அக்கறைமிகுந்தவராகவும் நெஞ்சுரம் மிக்க வீரப் பெண்மணியாகவும், தேசப்பற்று கொண்டவராகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும், காந்தி வழி நடப்பவராகவும், ஆணாதிக்கமிக்க தணிக்கைத் துறையில் தலை நிமிர்ந்த புதுமைப் பெண்ணாகவும் திகழ்ந்தார்.

மகாத்மா காந்தி அவர்கள், சென்னை – ராணி மேரி கல்லூரிக்கு விஜயம் செய்தபோது, அப்போது அங்கே படித்துக் கொண்டிருந்த மாணவி சிவபோகம், கைகளில் தங்கவளையல்கள் அணிந்திருப்பதைக் கவனித்தார். “இது உனக்கு எதற்குத் தேவை?” என்று கேட்டவுடன், சற்றும் தயங்காமல் உடனடியாகக் கழற்றி, சுதந்திரப் போராட்ட

இயக்கத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டாராம். 1920 – 30 ஆம் ஆண்டு காலகட்டங்களில், சிவபோகம், ஏராளமான சத்தியாகிரகிகளின் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். 1920களில் ருக்மணி லக்ஷ்மிபதி அவர்கள், தலைமை ஏற்றிருந்த இளைஞரணியில் இணைந்து காங்கிரஸின் பிரசார பீரங்கியாகவும் திகழ்ந்தார். அப்போதைய காலகட்டத்தில் சுதேசி இயக்கத்தின் பெண்கள் பிரிவு ஏற்படுத்தப்பட்ட போது, சிவபோகம், வெள்ளையனே வெளியேறு போராட்டம், அயல்நாட்டுப் பொருட்களை பகிஷ்கரித்தல், மதுபானக் கடைகளில் மறியல்கள், “சட்ட மறுப்பு இயக்கப்’’ போராட்டத்தில் பங்கு கொள்ளுதல் , ஆகியவற்றில் துணிந்து செயல்பட்டார். இதன் காரணமாக அநேகப் பெண்மணிகள் ஆங்கிலேயர்களால் கைதும் செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுள் சிவபோகமும் ஒருவர். அப்போதே தீர்மானித்துவிட்டார் இனி ஒரு பட்டயக்கணக்காளராக, தணிக்கைத் துறையில் தனது வாழ்க்கைப் பாதையைத் தொடருவது என்று. அந்த முடிவில் மிகவும் திடமாக இருந்த காரணத்தால் பல்வேறு தடைகளைக் கடந்து, 1933-ம் ஆண்டு R.சிவபோகம், இந்தியாவின் முதல் பெண் பட்டயக்கணக்காளர் என்ற பெருமைக்குரியவரானார். அந்த காலக் கட்டத்தில் இந்த படிப்பு GOVERNMENT DIPLOMA IN ACCOUNTANCY (GDA) என்றழைக்கப்பட்டது. **(CA** படிக்க விரும்பும், படித்துக் கொண்டிருக்கும் பெண்கள் சிவபோகத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். இவர் உள்பட, **CA** முடித்து, தணிக்கைத்துறையில் தங்களுக்கென்று ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்டு வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கும் பல பெண் **CA** க்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகம் **(NIGHTINGALES by CA.R.SIVAKUMAR & CA. R. PATTABIRAM)** “சாதனைப் பறவைகள்’’ என்றபெயரில் என்னால் தமிழாக்கம் செய்யப்பட்டு விரைவில் வெளிவர உள்ளது)

*சிவபோகத்தின் பெற்றோர்களுக்கு பெண்ணின் திருமண சிந்தனை வரத்தான் செய்தது. ஆனால் அன்றைய காலகட்டத்தில் படித்த பெண், வேலைக்குச் செல்பவர், தைரியமிக்கவர், சுதந்திர போராட்ட வீராங்கனை, பெண்கள் உயர்வுக்குத் துணிந்து குரல் கொடுப்பவர், இளம்பிள்ளை வாத நோயினால் சிறிதே பாதிக்கப்பட்டவர் என்றகாரணங்கள் சிவபோகத்தின் திருமணத்திற்கு தடையாகவே இருந்தன. ஆனால் அதுவும் சௌகர்யமாகவே போய்விட்டது சிவபோகத்திற்கு. பாரத தேசத்தின் தலைசிறந்த முதல் தணிக்கையாளர் என்கிற இலக்கில் வீறு நடை போட்டார்.*

*1949-ம் ஆண்டு, இந்திய பட்டயக்கணக்காளர்களின் நிறுவனத்தின்* (ICAI) *உருவாக்கத்தின் போது, சிவபோகம் உறுப்பினராக பதிவு செய்யப்பட்டார். ஒரு வருடத்திற்கு பிறகு,* Fellow Member *ஆகவும் நியமனம் செய்யப்பட்டார். சிவபோகம்,* CA *பயிற்சியினை, அந்த காலகட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த சாஸ்த்ரி & ஷா நிறுவனத்தின் ஸ்தாபகரும் பங்காளருமான* CS. *சாஸ்த்ரி அவர்களின் கீழ் பெற்றார். சிவபோகம் தனது பயிற்சிக்காலம் முடிந்தவுடன், சுய தணிக்கையாளராக செயல்பட முடிவெடுத்தார். ஆங்கிலேய அரசு, சிறைசென்றவர்கள், கணக்காளராகப் பதிவு செய்வதைத் தடுத்து சட்டம் இயற்றியதால், அதனை செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. ஆக்ரோஷமான பெண்மணியான சிவபோகம் சளைக்கவில்லை, ஆங்கிலேய அரசாங்கத்தின் இந்த சட்டத்தை எதிர்த்து, ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்தார். வெற்றியும் பெற்று 1937 ம் ஆண்டு தணிக்கைத் துறையில் தனித்து செயல்படத் தொடங்கினார்.*

'Nightingales' *சிவபோகத்தின் சாதனைகள் தொடரும்...*

**வாசகர்கள் கவனத்திற்கு** : *வேதபாரதி செய்திகள் படித்துவிட்டு நிறைய நண்பர்கள் தொலைபேசி மூலமாக கருத்துக்களை என்னிடம் தெரிவிக்கிறார்கள் தயவு செய்து வாட்ஸ்ஆப் மூலம் பதிவு செய்தால் மட்டுமே புத்தகத்தில் வாசகர் கடிதத்தில் பதிவு செய்ய முடியும். 9443495950*

## பசு - சர்வரோக நிவாரணி
## "சுற்று சூழல்"

*நாட்டு மாடுகள் நமது தேசத்தில் பெருமளவில் அழிக்கப்பட்டதன் காரணமாக சுற்றுச் சூழலும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.*

*நாட்டு பசுவின் சாணத்தில் செய்யப்பட்ட விராட்டி மற்றும் நெய்யினால் வேள்விகள் நடந்து வந்தன. யாகங்களும் வேள்விகளும் தொடர்ந்து தேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இறை வழிபாட்டின் அங்கமாக இன்றும் இருக்கிறது. நம்பிக்கையின் அடிப்படையில் இறைவனை வேண்டி செய்யப்படும் யாகங்களின் தீயில் சேர்க்கப்படும் பொருட்கள் விஞ்ஞான ரீதியாக பெரும் பயன்களை தருகின்றன.*

*யாகத்தீயில் சேர்க்கப்படும் ஒவ்வொரு 10 கிராம் பசுவின் நெய்யினால் 1 டன் அளவிற்கு சுத்தமான ஆக்ஸிஜன் கிடைக்கிறது. மேலும், ஆக்ஸிஜன் குடும்பத்தைச் சார்ந்த பிரொனபலின் ஆக்சைடு, எத்திலைன் ஆக்ஸைடு போன்றவைகளும் கிடைக்கின்றன. இவை, காற்றிலிருக்கும் ஈரபதத்தை மேலும் குளுமையாக்கி மேகங்களை மழையாக பொழிய காரணமாகின்றன.*

*ஜோதிர் லிங்கங்கள் எனக் கூறப்படும் குறிப்பிட்ட இடங்களும், அந்த க்ஷேத்திரத்தில் இருக்கும் லிங்கங்களும் வான்மண்டலத்திலிருந்து மழையை பூமிக்கு ஈர்க்கும் சக்திகள் நிறைந்தவை. அக்கோவில்களில் யாகங்கள் அதிகளவில் செய்யப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம்.*

*அதே போல, பசு சாணத்தால் செய்யப்பட்ட விராட்டியை ஓமத்தீயில் சேர்க்கும் போது அவை ஆக்ஸிஜன் காற்றினை தூய்மைப்படுத்தி தருகின்றன. மேலும் எதிர்மறையாக கண்ணிற்குப் புலப்படாத சக்திகளை விரட்டுகின்றன.*

*வீட்டு முற்றத்தில் சாணம் தெளிப்பது அடுப்பு, சுவர்கள் சாணத்தால் மெழுகுவது ஆகியவற்றால் ரேடியத்தின் வெப்பம் தாக்காமல் காக்கப்படுகிறது. எனவே தான் நமது பெரியோர்கள் சாணத்தை அதிக அளவில் வீட்டை சுற்றிலும் உபயோகித்தார்கள்.*

*முறையாக வேள்விகள் செய்வதாலும், நாட்டு பசுவின்*

நெய், சாணத்தைப் பயன்படுத்துவதாலும் தேசத்திற்கு தேவையான முழுமையான மழைப் பொழிவைப் பெறலாம். அதனால் உயிர்கள் வாழ்வதற்கான நீர் ஆதாரத்தை இந்த சமுதாயம் பெறுகிறது.

பொதுவாக ஏதோ ஒரு பொருள் எரிவதனாலோ அல்லது எரிப்பதனாலோ கார்பன் வெளியேறுகிறது. ஆனால் பசுவின் நெய் தூய்மையான ஆக்ஸிஜனை வெளியேற்றுகிறது. பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட விராட்டி ஆக்ஸிஜனை தூய்மையாக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. வீடுகளிலோ கோவில்களிலோ பசு நெய்யினால் ஏற்றப்படும் தீபச் சுடரினாலும் ப்ராண வாயு உற்பத்தியாகிறது. அந்த தீபத்தின் தீயில் குறைந்த அளவே கார்பன் காணப்படுகிறது. எனவே தூய்மையான நாட்டுப்பசுவின் நெய்யினால் தீபம் எரியச் செய்வது சிறந்தது.

இன்றைய சமுதாய வளர்ச்சிக்காக, தொழிற்சாலை பெருக்குதல், சாலை வசதி பெருக்குதல் போன்ற அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக பல இலட்சக் கணக்கான மரங்களை அழித்து வருகிறோம். இதனால் ஜீவராசிகள் வாழ்வதற்கான சுத்தமான மற்றும் தேவையான அளவில் பிராண வாயு (ஆக்ஸிஜன்) கிடைக்காமல் தவிக்கிறோம். மேலும், மரங்கள் குறைந்து வருவதனால் மழை பொழிவும் குறைந்து வருகிறது. இதுபோன்ற காலங்களில் நாம் பெருமளவில் யாகங்கள் செய்ய வேண்டும். அதற்கு சுத்தமான நாட்டின பாரம்பரிய பசுவின் நெய் பயன்படுத்துதல் அவசியமாகும்.

நாட்டின மாடுகளைப் போலவே 24 மணி நேரமும் ஆக்ஸிஜனை தரக்கூடிய அரச மரங்களையும் பெருக்க வேண்டும். உலகளவில் சுமார் 5 கோடி ஹெக்டேர் காடுகள் எரிவதனால் தேவையான ஆக்ஸிஜனும் குறைந்து வருகிறது. பல காரணங்களினால் அழிந்து வரும் காடுகளை மீண்டும் வளர்த்திடுதல் அவசியம். காடுகள் வளர்ச்சி பெறுவதற்கு நாட்டு மாடுகள் / பசுவினங்கள் மிக முக்கிய காரணிகளாக இருக்கின்றன.

- ஆதிரையன்

# பதினெண் புராணங்கள்

**(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.ஏட்., பரமக்குடி)**

*சென்றமாத தொடர்ச்சி...*

**3. விஷ்ணு புராணம் :** *இது பூர்வம், உத்திரம் என இரு பிரிவுகளாக உடையது. விஷ்ணுவைப் பற்றியது! 23 ஆயிரம் சுலோகங்கள் உடையது! பூர்வபாகம் 36 அம்சங்களை உடையது.*

*இதற்கு ஏழு உரைகள் உள்ளன! இப்புராணத்தை பராசரர் மைத்ரேயருக்கு எடுத்துரைத்தார்! வேதாந்தம், வைராக்கியம் நிறைந்தது! ஸ்ரீ சங்கர பகவத்பாதர் தனது பாஷ்யத்தில் இப்புராண சுலோகங்களை அதிகமாக எடுத்துக் காட்டுகிறார். துருவன், பிரஹ்லாதன், யாக்ஞவல்கியர், கங்கை, ஜடபரதர், நிதாகர், வியாச அவதாரம், வேதம் வகுத்தல், தன் வந்திரி, ராம, கிருஷ்ண சரிதம், கவியின் தன்மை முதலியவை பூர்வபாகத்திலும், கர்மவிபாகம் கீதம், நாட்டியம், காவியம், நாடகம், அர்த்த சாஸ்திரம், பிராகிருத மொழி முதலியனவும் ஹம்ஸ கீதையும் உத்தர பாகத்தில் உள்ளன! இதனை வில்சன் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.!*

**4. சைவம் :** *சிவபுராணமாகும் இது! வாயுபுராணம் என்றும் சிலர் கூறுவர்! வாயுபகவான் இதனைக் கூறினார்! 24 ஆயிரம் சுலோகங்களையும் 459 அத்யாயங்களையும் கொண்டது! வித்யேஸ்வர, ருத்ர, சதருத்ர, உமா, கைலாச, வாயவீய, என ஏழு சம்ஹிதைகளை உடையது! இரு காண்டங்களை உடையது! லிங்கமும் சரீரமும் அமைத்தவர் சிவனே! திரிபுரனை வெற்றி கொள்ள திருமால் ஜிநநாக வந்தது, விபூதி, ருத்திராகவும், பஞ்சாட்சரி, சிவராத்திரி, சிவனின் ஐந்து முகம், சிவசஹஸ்ரநாமம், கணேசர், ஸ்கந்தன், வீரபத்திரன், பரகாயப் பிரவேச மந்திரம், பிரதோஷம், வேள்விகளில் தான் பிரும்மாவிற்குப் பூஜை, நாரத மோட்சம், விஷ்ணு சகஸ்ரநாமம் மற்றும் ராம மந்திரத்தையும் சிவன் சத்தக் கூறல், சரப மூர்த்தி, உபமன்யு கிருஷ்ணன் சிவ பஞ்சாக்ஷரத்தால் சாம்சனம்பெற்றது, பனிரெண்டு ஜ்யோதிர் லிங்கங்கள் முதலியவைகள் இந்நூலில் குறிக்கப்படுகின்றன! இந்நூலில் உள்ள வர்ணனைகளையும், பதங்களையும் காளிதாசன் குமார சம்பவத்தில் கையாள்கிறான்.*

**5. பாகவதம் :**

*12 ஸ்கந்தம் 335 அத்யாயம், 18 ஆயிரம் சுலோகங்களையும் கொண்ட இப்புராணம் விஷ்ணுவைப் பற்றிக் கூறுகிறது! பகவானது விராட் உபாசனைகள், 23 அவதாரங்கள், துருவன், பிரஹலாதன், ஜடபரதர், அஜாமினன், கஜேந்திரமோட்சம், கிருஷ்ணலீலை, உத்தவர், அக்ரூரர், மைத்ரேயர் வரலாறுகள், கோபிகா கீதம், ப்ரமர கீதம் முதலிய பாகவத விசேஷங்கள் இதனுள் உள்ளன! இதில் உள்ள சுலோகங்கள் கடினமானவை! இதுவும் இந்தியர் இருவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது!*

*2 ஸ்கந்தமும், 318 அத்யாயங்களும் 18 ஆயிரம் சுலோகங்களும் உடைய தேவிபாகவதமும் பாகவத பூராணம் எனச் சிலர் கூறுவர்!. இது முற்றிலும் ஆதி சக்தி தேவியின் பெருமையைக் கூறுகிறது! தேவியின் அவதாரங்கள், பற்பல அசுரவதங்கள், கர்ம அனுஷ்டானங்கள், காயத்ரியும், தேவி வீற்றிருக்கும் மணித்வீபமும், இதில் கூறப்படுகின்றன! இது பலரால் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. விஞ்ஞான ஆனந்தர் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளார்.!*

**6. பவிஷ்யோத்தர புராணம் :** *எதிர்காலத்தில் வரும் விஷயங்களைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. இப்புராணம்! 585 அத்யாயங்களும் 14500 சுலோகமும் பிராம்ம, மத்யம, பிரதிசர்க்க, உத்தர என்னும் நான்கு பர்வாக்களும் கொண்டது! நம் காலத்தில் நாம் கேட்டதை முன் கூட்டியே கூறி உள்ளது.*

*ஜைன, முகம்மதிய, கிறஸ்தவ மதங்களைப் பற்றியும் ஆங்கிலேயர் நம் நாட்டை ஆள்வது, நாமதேவர், கபீர்தாசர், ஆதிசங்கரர், இராமாநுஜர், மத்வர், வராஹ மிகிரர், உதயசிம்ம ஜயச்சந்திரன் முதலியவர்களைப் பற்றி இது கூறுகிறது! மத அபிமானமும் நம்பிக்கையும் உள்ளோர் வியாசரின் வரும் பொருள் உரைக்கும் திறமையைப் போற்றுவர் மொழிகளைப் பற்றியும் கூறுகிறது. பாநீயம் பாணி, ஷஷ்டி, ஸிக்ஸ் போன்ற பலமொழிச் சொற்களையும் இதில் காணலாம்.*

தொடரும்.....

# பெண்மையைப் போற்றுவோம்

*வேதபாரதி சென்னை சார்பாக கடந்த 18.04.2021 அன்று காணொளி மூலமாக 'பெண்மையைப் போற்றுவோம்" என்ற மாதாந்திர தொடர் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி கடவுள் வாழ்த்துப் பாடலுடனும், வரவேற்புரையுடனும் தொடங்கியது. தற்போதைய சூழ்நிலையில் மிகவும் விவாதத்திற்கு உள்ளாகி வரும் பெண்களின் மாதாந்திர விலக்கு சம்பந்தமான தலைப்பில் நிகழ்ச்சியின் விவாதங்கள் அமைந்திருந்தன.*

*நமது முன்னோர்களின் அறிவு பூர்வமான அதே நேரத்தில் அறிவியல் பூர்வமான அணுகுமுறையே அந்த மூன்று நாட்களில் விலகியிருத்தல் என்பதை அழகான பட விளக்கங்களுடனும், கருத்துரைகளுடனும் இளவயதுப் பெண்கள் எடுத்துரைத்தது அனைவரையும் கவர்ந்தது. அறிவியல் பூர்வமான அணுகுமுறை என்பதை நிரூபிக்க அச்சமயங்களில் வெளிப்படும் மறைமுகமான அணுத்துகள்களின் வெளிப்பாடும், அதன் தாக்கம் சம்பந்தப்படும் அத்தனை பேரையும் பாதிக்கும் என்பதையும் புரிய வைத்தனர். அந்த வெளிப்பாட்டினால் பெண்களுக்கு ஏற்படும் மனச்சோர்வு, உடல் சோர்வு, உற்சாகமின்மை போன்றவை பெண்களை மேலும் சோர்வுக்குள்ளாக்குவதால், ஓய்வு அவசியமாகிறது. இதை ஏதோ பெண்களை நம் சமூகம் இழிவுபடுத்திவிட்டதாக சொல்வதெல்லாம் அறியாமையினால் பேசப்படுவது. உண்மையிலேயே இது பெண்களின் இயல்பான உடல் வாகு, மன நிலையைப் புரிநது கொண்டு அன்பின் அடிப்படையில் செய்யப்பட்ட ஏற்பாடு. ஆனால் இன்றைய நவீனத்துவ கலாச்சாரமற்ற உலகப்போக்கில் இது கொச்சைப் படுத்தப்படுகிறது.*

*ரிது வித்யா என்ற புத்தகத்தை சினு ஜோசப் என்பவர் வெளியிட்டுள்ளார். அவர் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டு இந்த மாதவிலக்கு சம்பந்தமான பல்வேறு தகவல்களை அப்புத்தகத்தில் திரட்டித் தந்துள்ளார்.*

*மாதவிலக்கு தினங்களில் அழகுப் பொருட்களைப்*

*பயன்படுத்தல், நகம் வெட்டுதல், சமைத்தல், பொதுக்கூட்டங்களில் பங்கேற்றல், அதிக காரம், எண்ணெய் பதார்த்தங்கள் மேற்சொன்ன அனைத்தையும் தவிர்ப்பது குறித்து நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.*

*ப்ராண சக்தி அதிகம் பரவியுள்ள கோயில் மூலிகைத் தோட்டங்கள், துளசி செடி ஆகிய இடங்களுக்கு இந்நாட்களில் செல்லாமல் இருப்பது சாலச்சிறந்தது. ஏன் எனில் இந்நாட்களில் உடலில் இருந்து அபான வாயு அதிகமாக வெளிப்படும் சமயமாதலால், பிராண வாயுவுடன் அது சம்பந்தப்படும் போது குறிப்பிட்ட நபருக்கும், உடன் கலப்போருக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன என்ற அருமையான விளக்கம் தெரிவிக்கப்பட்டது.*

*மேலும் மூன்று நாட்கள் விலகலுக்குப் பின் நான்காம் நாள் முதல் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், அவரவர் குடும்ப வழக்கங்கள், உணவு முறையில் செய்ய வேண்டிய மாற்றங்களை நிகழ்ச்சியில் பங்கேற்ற இதர மகளிர் பகிர்ந்து கொண்டது அனைவருக்கும் பயன் உள்ளதாக இருந்தது.*

*நிகழ்ச்சியை தொகுத்தளித்த யுவஸ்ரீ பாரதியைச் சேர்ந்த மதுரிமாவையும், விளக்கவுரை ஆற்றிய மகாலஷ்மியையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். நிகழ்ச்சி முடியும் முன் ஸ்ரீஸ்ரீ பால பெரியவா இளைஞர் / யுவதிகளுக்கு சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியில் பேசிய காணொளியும் காண்பிக்கப்பட்டது. இறுதியில் 'மைத்ரீம் பஜத்'' பாடலுடன் நிறைவுற்ற இந்நிகழ்சியைப் போல் மேலும் பலப்பல புதுமையான நிகழ்ச்சிகளை கண்டுகளிக்க ஆவல் கொண்டு கலந்து கொண்டவர்கள் விடைபெற்றனர்.*

*நமஸ்காரம்! ஹரி ஓம்.*

*தர்மபுரி வேதபாரதி பொறுப்பாளர் ஸ்ரீ சந்த்ரமௌலி, ஊரப்பாக்கம் பொறுப்பாளர் ஸ்ரீமதி சுதா சந்த்ரசேகர் நிகழ்ச்சிக்கு எடுத்த குறிப்புகளுக்கு மனமார்ந்த நன்றி.*

*ஆசிரியர்.*

# புரோஹிதர் "அன்னதான கூடம்"

*தற்போது சிறுதானிய உணவுகளை சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களுக்கானது என்ற வகையில் அமைந்துவிட்டது. சுமார் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்புவரை கிராமங்களில் உழைக்கும் மக்களின் உணவு என்பது சிறுதானிய வகையாகும். அவர்களது வாழ்க்கையில் "அரிசி சோறு'' என்பது அபூர்வமானது. பண்டிகை தினங்கள், அமாவாசை போன்ற ப்ரத்யேக விஷேசமான தினங்களில் மட்டுமே அரிசி உணவு சமைப்பார்கள். இதற்கு காரணம், தானியங்களை விவசாயிகள் உற்பத்தி செய்தாலும், அரிசி சாதம் சமைக்கும் போது அதற்கு சாம்பார், ரசம் போன்ற கூடுதலான பொருட்களையும் சமைக்க வேண்டும் என்பதும் ஆகும்.*

*இது போன்ற நிலையில் கிராமத்தில் எந்தப் பிரிவை சார்ந்தவராயினும் அவர்கள் வீட்டில் சிறு பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு ரசமும், சாதமும் புரோஹிதர் வீட்டிலிருந்து தான் போகும். அது மட்டுமல்ல, உழைக்கும் மக்கள் பல நேரங்களில் 'ஐயர் வீட்டு அம்மா" எனக்கு சோறு போடு என்று ஏக வசனத்தில் உரிமையோடு அமர்ந்து சாப்பிட்டுச் செல்வதும் உண்டு. கிராமத்தினர் அவர்களது வீட்டிற்கு யாராவது விருந்தினர்கள் வரும்போது அரிசி, காய்கறி, வாழையிலை உட்பட அனைத்தும் புரோகிதர் வீட்டிற்கு வந்து வாங்கிச் செல்வர். தானியங்களுக்கு குறைவில்லாத புரோகிதர் இல்லம் இவற்றிற்கு பணம் ஏதும் பெறுவதில்லை.*

*ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு விவசாய பணி, மாடுகள் வியாபாரம், தானிய வியாபாரம், தானிய பரிமாற்றம் போன்ற வேலைகளுக்கு குடிமக்கள் சென்று திரும்புகையில் அவர்களது வயிற்றுப் பசி ஆறுமிடம் புரோகிதர் இல்லங்களே! இவர்கள் பல நேரங்களில் இரவுப் பொழுதினை புரோகிதர் இல்ல திண்ணைகளில் கழிப்பதுமுண்டு. உணவகங்கள் இல்லாத கிராமங்கள், உணவகங்கள் இருந்தாலும் அங்கே செல்லமுடியாத பொருளாதார நிலை என்ற சூழலில் இவர்களுக்கான அனைத்தும் அந்த கிராம புரோகிதர் வீடுகள்தான்.*

*கிராமங்களுக்கு பார்வையாளராக, பணி நிமித்தமாக வருகின்ற பல அரசு அதிகாரிகள், ஊழியர்கள் போன்றோருக்கும்*

*புரோகித ஐயர் வீட்டில்தான் உணவு ஏற்பாடாகும். அரசு அதிகாரிகளும் சற்றும் தயக்கம் இன்றி சம்மதிப்பார்கள். காரணம், பசியாற உணவளித்ததற்காக எந்தவிதத்திலும் அந்த புரோகிதர் அரசு ஊழியரிடமோ, அதிகாரிகளிடமோ பிரதிபலன் எதிர்பார்ப்பதில்லை. அவர்களது ஒரே சிந்தனை தர்மம்தான். பசிக்கு உணவளிப்பது தர்மம், பிறகுதான் புண்ணியம், இதை, தான் கடைபிடிப்பதோடு மட்டுமின்றி சமுதாயத்திற்கும் போதிப்பவர்கள் புரோகிதர்கள்.*

*முகமே அறிமுகமில்லாத வெளியூரைச் சார்ந்த யாராவது பகலிலோ, இரவிலோ, பசி நேரத்தில் கிராமத்தாரைப் பார்த்து உணவகம் பற்றி விசாரித்தால் அவர்கள் நேரிடையாக கையை காட்டுவது புரோகித ஐயர் வீட்டையே! பசிப்பவரது வயிற்றை பிரதிபலன் பாராது, தயக்கமின்றி மலர்ந்த முகதோடு சமுதாய வேறுபாடின்றி நிரப்புபவர்கள் புரோகிதர்கள். பெண் குழந்தை வைத்திருப்பவரிடம் அக்கால அக்ரஹார பெரிசுகள் சொல்லும் ஒரு சொலவடை யாதெனில் "புரோகிதன் வீட்ல பசியேதுடா", உன் பெண்ண அந்த ஆத்துல குடு அவ நல்லா இருப்பா - என்பதேயாகும். இந்த பொருள் பொதிந்த வரிகள் இன்றைக்கும் நம் கண் முன்னே உண்மையாக நிற்கின்றன.*

*பொருளாதார ரீதியாக ஒரு புரோகிதன் எத்தனை இன்னல்களை சந்தித்தாலும், தன் வாசற்படி மிதிப்பவர் எவ்வளவு பேராக இருந்தாலும் அவர்கள் வெற்று வயிற்றோடு அனுப்புவதில்லை என்பது இன்றைக்கும் நிலைத்திருக்கும் நிதர்சனம், உபசரிப்பின் உண்மையான இடம் இவர்களது இல்லங்கள்.*

*இன்றைக்கும் கிராம மக்கள் அவர்களது தோட்டங்களில் விளையும், காய்கறிகள், பருப்புகள், வேர்க்கடலை போன்றவறை கேட்காமலே எந்தவித தொகையுமின்றி புரோகிதர்களின் இல்லம் தேடிக் கொண்டுவந்து கொடுக்கும் நிகழ்ச்சிகளே புரோகிதர்களின் அன்னமிடலுக்கு அத்தாட்சி!*

*அன்னதான உயிரோட்டத்தின் ஜீவன் இன்றும் இருப்பதற்கு இவர்களது தொடர் தர்ம சிந்தனையோடு அன்றாட வாழ்வின் அங்கமான பசிப்பவர்களின் வயிற்றை நிரப்பும் செயல்களும் ஒரு காரணமாகும்.*

**- ஆதிரையன்**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**
**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**
**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**


1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

**RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23**
**Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23**
**Posted at Patrika Chennai, Egmore.**
**Posted between 1 - 7th June 2021**




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜூவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter

**If not delivered please return to**
**VEDABHARATHI**
**No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.**